# தென்மொழி

## பொருளியல் பொதுமைக்கும் புரட்சிக்கும் வித்து!

மொழி, இன விடுதலைவேண்டும்! — பின்
முற்றுமாய்த் தமிழ்நாட்டு
விடுதலை வேண்டும்!

வழியது வல்லாமல் தமிழர்] — வேறு
வகையினில் முன்னேறும்
வாய்ப்பொன்றும் இல்லை! (மொழி)

அழியாமல் இனத்தினைக் காக்கும் — மொழி
யன்றோ நம் தமிழரை
ஓர் அணி சேர்க்கும்!

இழியாமல் மேல்நின்று தூக்கும் — தமிழ்
ஏற்றமே மதம், சாதி
வேரினைத் தாக்கும்! (மொழி)

முதியவர் இளையவர் வருக! — இன
முனைப்பிற்கு அவரவர்
உழைப்பினைத் தருக!

புதுமைக்கும் விளைவுக்கும் சொத்து! — தமிழ்,
பொருளியல் பொதுமைக்கும்
புரட்சிக்கும் வித்து! (மொழி)

சுவடி : 20
ஓலை : 8

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1-25 உருபா

Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

0 : 998 : பேரன்புடையீர், வணக்கம். தமிழ்மொழியின் செவ்விய தன்மையை எண்ணும் போது இஃது இன்று நேற்று தோன்றிய மொழியன்று; தொன்மையானது; எளிமையானது; ஒலியொடு கூடியது; தூய்மையானது; ஒப்பற்ற பண்பாட்டுச் சிறப்புடையது; நடு நிலை அறங்கூறுவது. இதனை மக்களில் பெரும் பான்மையோர் இதுவரை உணர்ந்தாரில்லை. தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வர், தமிழ்நாடு வாழும் என்பதை அறியார்.

பிற நாட்டவர்க்குரிய மொழிப்பற்று நம் நாட்டு மக்களிடம் காணமுடியவில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகமே போற்றி வருகின்ற திருக்குறளை உருவாக்கிய நம் நாடு பல வேற்று மொழியாளர்களின் தலையீட்டால் பழம் பெருமை விளங்காதிருந்த போது, இந்த நூற்றாண்டில் தங்களைப் போன்ற முத்தமிழ்க் காவலர்கள் பலர் தோன்றித் தமிழில் கதை நூல்கள், இலக்கியங்கள், பாவியங்கள், நாடகங்கள், திறனாய்வு, வரலாற்று நூல்கள் அறிவியல் நூல்கள், ஆகியவற்றைப் படைத்து, பதிப்பித்துத்தமிழுக்குப் புத்துயிர் அளித்து வந்தனர்; வருகின்றனர்.

இத்தகையோருக்குப் பொருளுதவி அளித்து ஆதரித்துப் போற்றி வந்தால் தமிழ் வளர்ச்சியுறும். எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், சிந்தனையாளர்களின் எண்ணிக்கை பெருகும்.

எதிர்ப்புக்கிடையே தாங்கள்மொழித் தூய்மையைக் காத்து வர அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். பேரறிஞர்களை, அறவாணர்களை, தக்கோரை அவர்களின் வாழ்நாள்களிலேயே போற்றிச் சிறப்பித்துப் பண முடிப்புக் கொடுத்து ஊக்குவிக்கத் தவறி, அவர்கள் மறைந்தபின் பெருமைப்படுத்தி வருகிறார்கள்.

தாங்கள் உடல் நலனைப் பேணிக் கொண்டு, நீடூழி இனிது வாழ்ந்து, மொழி காக்கும் பெரும் பணியினைத் தொடர்ந்து ஆற்றி வர இறைவன் அருள்புரிவாராக. அடியேனுக்கும், 86 ஆண்டுகள் ஆவதால், உறுப்புகளெல்லாம் சில நேரங்களில் ஒத்துழைக்க மறுக்கின்றன.

தங்கள் அன்புள்ள,

— பு. அ. சுப்பிரமணியன் புதுக்கோட்டை.

0 : 999 : பெருமதிப்பிற்குரிய ஐயா, தங்களுக்கு எனது பணிவன்பான வணக்கங்கள்.

தென்மொழி—தமிழ்ச்சிட்டு இதழ்களைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தாங்கள் தெரிவித்துள்ள செயல்முறைத் திட்டங்களைப் படித்தேன். மிக்க மகிழ்ச்சி. அன்புடன் வரவேற்கிறேன். ஆக்க முறையில் உதவியும் உரிய-ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கித் தங்கள் தொண்டிற்குத் துணைநிற்க வேண்டியது தென்மொழி அன்பர்கள் அனைவர்தம் கடமையுமாகும். நிற்க, தமிழ்நாடு-தமிழ் மொழி-தமிழ் இனம் ஆகியவற்றின் நலம்நாடி, முன்னேற்றம் கருதி உழைக்கும் தங்களைப் போன்ற தகுதிசால் தமிழினப்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]*



**தென்மொழி**
இலக்கிய இதழ்
மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள் : தென்மொழி மலைவாணன், தென்மொழி
ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன்.
தென்மொழி நா. இளமாறன்.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 20] ௨௦௧௫ மேழம். மே-சூன் 84' [ஓலை. 8

# அருளியின் சொல்லாராய்ச்சி ஒன்றே தமிழைமீட்கும் அருந்திறன் கொண்டது 2

('இவை தமிழல்ல' — நூலின் மதிப்புரை.)

(சிறப்பு முன்னுரை — தொடர்ச்சி)



ஆனால், அஃது இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பதினாயிரம் (பாவாணர் கணக்குப்படி) ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்பதையும், அது, தோன்றிய இடம், முன்பு, இந்தியப் பெருங் கடலுள் இருந்து மூழ்கிப் போன இலெமூரியாக் கண்டத்தின், மிகவும் பிற்பகுதி எச்சமான குமரிக் கண்டம் என்பதையும், அங்குதான் முதல் மாந்தனும் தோன்றியிருந்தான் என்பதையும், அவன் மரபினர்தாம் உலகமெலாம்

பரவி, அவனொடு தோன்றிய தொன்மைக் குமரித்தமிழ் முது மொழியின் அன்றைய தொடக்க மூல ஒலி முதனிலைச் சொற்களை யும் தம்முடன் கொண்டு சென்று, உலகமெலாம் பரப்பினர் என்பதையும், பின்னர் காலப் போக்கில், அம் மூல ஒலி முதனிலைச் சொற்களினின்றே, உலகின் பெரும்பாலான மொழிகள் தோன்றின என்பதையும், மொழிநூலாராய்ச்சியும், நில நூலாராய்ச்சியும், உயிர் நூலாராய்ச்சியும், மாந்தநூலாராய்ச்சி யும் ஒருங்கே கற்ற நடுநிலை அறிஞர்கள் ஒரு சிலரே அறிந்திருப்பர்.

இவ்வரலாற்று அடிநிலைகளை, அறிவுநூலாராய்ச்சியில்லாதவர் களும், மொழிநூலாய்வில் முற்ற நுழையாதவர்களும், ஆரிய மொழிகளுக்கும், அவர்தம் கலை நூல் மாண்புகளுக்கும் அடிமைப் பட்டவர்களும், அரசியல் நிலைகளில் தம்தம் பதவி நிலைகளும் பயன்நிலைகளும் கருதித் தம் வாழ்வை அடகு வைத்துக் கொண்ட வர்களும், இன்னும் தந்நலவுணர்வுடையவர்கள் சிலரும் தவிர, மற்றவர்கள் எவரும் ஐயுறார். இதுநிற்க.

இனி, குமரிக் கண்டத்திலிருந்து, மிகுதொன்மைக் காலத் திலேயே, அஃதாவது மாந்தன் குரங்கு நிலையிலிருந்து படிநிலை வளர்ச்சியுற்று, மூளைத்திறன் விளங்கப் பெற்றுக், கருத்துநிலை கால் கொண்டு, அதன் முதிர்ச்சியால், ஒலிகளை உணர்வு நோக்கி வெளிப்படுத்தும் திறமை வாய்ந்து, உணர்வொலிகளையும் ஒப் பொலிகளையும் கூறிக்கூறி, அவை செப்பமுற்றுக், கருத்தொலி களாக, ஒரெழுத்தொரு மொழிகளையும், பின் ஈரெழுத்தொரு மொழிகளையும், அதன் பின் மூவெழுத் தொருமொழிகளையும் அதன் பின்னர் பொருள்தெரி முதனிலைச் சொற்களையும், அவற்றை நிரல் பெற அமைத்துச் சிறுசிறு சொல் தொடர்களையும் வெளிப்படுத்தும் திறமை பெற்றுயரவும் ஆகிய இவ்விடைக் காலங்களில், அவ்வக்கால், பல வளர்ச்சித் தரங்களில், வளர்ந்தும் வளராத நிலையினும், வேட்டத்தின் பொருட்டும் விருப்பத்தின் அடிப்படையிலும், புலம் பெயர்ந்து, புறப்பட்டுப் போன காலையில், குமரிக் கண்டத்துக் கிழக்கு நோக்கி ஒரு கூட்டமும், வடக்கு நோக்கி ஒரு கூட்டமும், மேற்கு நோக்கி ஒரு கூட்டமும் பிரிந்து செல்ல, குமரி நிலத்திலேயே ஒரு கூட்டம் தங்கியிருந்து, மிகு வளர்ந்த மொழி நிலையும், பண்பாட்டு நிலையும், நாகரிகநிலையும் பெறப்பெறவும், பின் பல்லாயிரம் ஆண்டுகள் சென்றபின், அக்கூட்டத்தார் பேசிப் பேசிச் செப்பமுற்ற மொழி, குமரிக் கண்ட முந்துநிலை முதுதமிழாயும், பின்னர் முத்தமிழாயும் முகிழ்த்தலர்ந்ததும், அம்மொழி பேசியோர் முன் தோன்றி மூத்த

குடியாயும், பழம்பெரும் பாண்டிய குலமாயும் ஆகியதும், பின்னது அரசும் ஆளுமையும் கொண்டு வாழ்ந்து வளர்ந்து செழித்ததும் ஆகிய இந்நிலைகளையெல்லாம் பழம் வரலாற்று நூல்கள் நமக்குச் செப்பமுறக் கூறுகின்றன.

இனி, குமரிக் கண்டத்துக் கிழக்கு நோக்கிப் புலம் பெயர்ந்து, புறம் போகிய மாக்கள், சாவா என்னும் சாலித்தீவகம், சுமத்ரா என்னும் சுமதுரா, போர்னியா என்னும் புருணை ஆகிய தீவகங்கள் வழியாக ஆத்திரேலியா வரையும் சென்று குடியேறியதும், வடக்கு நோக்கிச் சென்றவர்கள் பனிமலை வரை சென்று திரவிடர் ஆனமையும், மேற்கு நோக்கிச் சென்றவர்கள் மடகாசுகர் வழி தென்னாப்பிரிக்காவின் பல பகுதியில் குடியேறி அமர்ந்ததும், அவருள் சிலர் தென்னாப்பிரிக்காவின் வடபால் உள்ள சேமாலிலாந்து வழியாக எத்தியோப்பியா, எகிபது சென்று பின் அதன்மேல் நண்ணிலக் கடற்கரையடைந்து, பின்னர் படிப்படியாக ஐரோப்பாவில் பரவியதும், வடஇந்தியா சென்று திராவிடராக மாறியோருள் சிலர் வடமேற்கே சைப்பிரசுதீவு, கிரேத்தாதீவு, கிரேக்கம், இத்தாலி முதலிய நாடுகள் வழியாய், இசுக்காண்டினேவியா வரை சென்று ஆரியராக மாறினதும், பின் அவருள் ஒரு பகுதியினர் வேத ஆரியர் என்னும் பெயருடன் சிறிய ஆசியா, பாரசீகம் முதலிய நாடுகள் வழி வந்து, வடமேற்குக் கணவாய்களின் வழி இந்தியாவிற்குள் புகுந்ததுமான செய்திகள் எல்லாம் மாந்தவியல், அரசியல், வரலாறு அறிந்தவர்கள் தெரிவிக்கும் கூற்றுகளாகும்.

இந்தியாவில், ஆரியர் வருகைக்கு முன், வடபுலம் தென்புலம் ஆகிய முழுநிலத்திலும், தமிழ்திரிந்த திரவிடமொழிகளைப் பேசியோரே நிறைந்திருந்ததை, பேரா. ஈ. செ. இராப்சன், வயவர். சர் சான் மார்சல் முதலிய முந்துநிலை வரலாற்றாசிரியர்கள் முற்ற ஆய்ந்து முடிவாய் உரைக்கின்றனர். கீழ் நாடுகளையும் மேல் நாடுகளையும் மொழிநிலையில் இணைத்துக் கொண்டுள்ள மூல அடிப்படையான மொழி தமிழே என்பதை, பண்டாரகர் கில்பர்ட் சிலேட்டர் என்னும் வரலாற்றுப் பேராசிரியர் விதந்துரைக்கின்றார்.

இஃது இவ்வாறாக, மொழிநிலையில், குமரிநிலத்தினின்று வரலாற்றுக் காலத்திற்கு முன்பே வடமேற்காகவும், வடக்காகவும், கிழக்காகவும் புலம்பெயர்ந்து புறம் போந்த, தொன்மைக் குமரித்தமிழ முதல் மாந்தர், பல நாடுகளிலும் சென்று குடியேறி வாழ்ந்த நிலையில், அவர் தொடக்கத்துக் கொண்டு சென்ற மூல

வொலி முதனிலை முதுதமிழ் அடிப்படை வேர்ச்சொற்களைக் காலப் போக்கில், அவ்வவ் விடங்களுக்கும் அவ்வக் கால மாறுபாடு களுக்கும் ஏற்ப, வளர்த்தும், திரித்தும், திசைத்தும் வழங்க முற்பட்ட தன்வழி, பல்லாயிரக் கணக்கான மொழி வழக்குகள் தோன்றின. பின்னர் அவற்றின் அடிப்படையில் புதுப்புதுச் சொற்கள் தோன்றிப் புதுப்புது மொழிகள் உருவாகிப் பல்வேறு மொழிக் குலங்கள் கிளர்ந்தெழுந்தன. அவ்வாறு எழினும், அவ்வம் மொழிகளில் உள்ள பெரும்பாலான சொற்களின் மூலங்களையும் வேர்களையும் இன்று ஆராயினும், அவை நம் முதுதமிழ்மொழியின் முந்துநிலை வடிவங்களாக இருப்பதைக் கண்டு மகிழலாம். இனி, அவை கண்டு மகிழத்தகும் ஒரு கருத்துணர்வாக மட்டுமே அன்றி, நம் மூலமொழியாகிய மூத்ததமிழ்மொழியைப் பல்லாற்றானும் இற்றைநிலைக்கும் பொருந்துமாறு புதுக்கியும் வளர்த்தும் கொள்ளும் வகையில் ஓர் அறிவுணர்வாகவும் இருப்பதை மேலும் உணரலாம். உணரவே நம் மூவாத் தமிழ்மொழி ஓர் இலக்கியச் செழுமை வாய்ந்த உலக முதன்மொழியாக விளங்குவதை ஒப்புக் கொண்டே ஆகல் வேண்டும். ஒப்புக் கொள்ளவே, உலக மொழிகளுக்கெல்லாம் தாய் சமசுக்கிருதமே என்று பொய்யாக வும், பூசலாகவும் கூறிவரும் புன்மைக்கூற்று, பொடிப்பொடியாய்ச் சிதர்ந்து உதிர்ந்து போவதைக் காணலாம். காணவே, சமசுக் கிருதத்தையும் அதன் வேத, புராண, இதிகாச, வர்ணச்சிரமக் கோட்பாடுகளையும் வைத்தே, உலக மக்களை ஏமாற்றியும் எத்தி யும் பிழைத்து வரும் ஆரியப் பார்ப்பனரின் நயவஞ்சக வாழ் வியலுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஏற்படவே, நந்தமிழ் இனத்தின் அடிமைத்தனம் தகரும்; அறியாமை விலகும்; தன்னறிவு புலப்படும்; தன்மானம் செழித் தோங்கும். ஆரியத்தால் சிதைக்கப்பட்டும் சீரழிக்கப்பட்டும், களையும் கவினும் இழந்து, கட்டவிழ்ந்து குலைவுற்றுப்போன நம் தமிழினம் ஒன்றுபடும்! இவ்வுலக உருண்டையில் அஃது ஓர் உரிமை பெற்ற அரசாளுமை கொண்ட ஓரினமாக விளங்கித் தோன்றும்! எனவே, மொழியடிப்படையில் நாம் உணர வேண்டிய வரலாறு நினைவூட்டப் பெறுகிறது! நம் உணர்வைப் புதுப்பித்துக் கொள்ளவும் நிலைப்படுத்திக் கொள்ளவும் இம்மொழிநூல் வரலாற்று அறிவியல் இன்றியமையாதது; வென்றியமாக அமையத்தக்கது.

இனி, குமரிநிலத் தொன்மை மாந்தன் உலகமெலாம் கொண்டு பரப்பிய மூல ஒலி முதனிலைத் தமிழ்ச் சொற்களி

னின்றே, துரேனியம் (Turaniam), ஆரியம், (Ariyam), சேமியம் (Semitic) எனும் மும்மொழிக் குடும்பங்கள் (குலங்கள்) தோன்றின என்பதையும், அவற்றுள் துரேனிய மொழிக் குடும்பத்தில், உலகின் வடபகுதியில், துங்குசியம் (Tungusi c), மங்கோலியம் (Mangolie), துருக்கியம் (Turkie), மயொடியம் (Samoyedi), பின்னியம் (Finnic) என்பனவும்; உலகின் தென் பகுதியில், தையம் (Taic), மலாயம் (Malaie), கங்கையம் (Gangatic), உலோகத்தியம் (Lohitic), முண்டா (Munda), திராவிடம் (Dravidian) என்னும் மொழிகளும்;

ஆரியமொழிக் குடும்பத்தில், மேலை ஐரோப்பிய இனத்தில், தியுத்தானியம் (Teutonic), கெல்த்தியம் (Keltic) இத்தாலியம் (Italic), எல்லெனியம் (Hellenic), சிலாவனியம் (Slavonic), இலெத்தியம் (Lettic), தாழ்செருமனியம் (Low-German), உயர்செருமனியம் (High-German), இசுகாண்டினேவியம் (Scandinavian), கோதியம் (Gothic,) பிரிசியம் (Frisian), டச்சு (Dutch), பிளெமியம் (Flemish), ஆங்கில சாக்சானியம் (Anglo-Saxon), ஆங்கிலம் (English) ஆகியவையும்; கீழை ஆசியத்தில் ஐரேனியம் (Iranian), பெஃலெவி (Pehlevi), பெர்சியம் (Persian)—ஆகிய மொழிகளும்;

சேமிய மொழிக்குடும்பத்தில் அரமியம் (Aramaic), சீரியம் (Syriac), கல்தேயம் (Chaldee), அசீரிய பாபிலோனியம் (Assyrian and Babylonian), கானனியம் (Canaanitic), அரபியம் (Arabic), எபிரேயம் (Hebrew), பொனிசியம் (Phoenician), சமாரித்தம் (Samaritan), கார்த்தகினியம் (Carthaginian,) இம்யரித்தியம் (Himyritic), எத்தியோப்பியம் (Ethiopic)—ஆகிய மொழிகளும். தோன்றிவிளங்கின என்பதையும். மொழிநூல் வரலாற்றுநூல் ஆய்வாளர்கள் வகுத்துக் காட்டுகின்றனர்.

இனி, திராவிட மொழிக்குடும்பம் எவ்வாறு உருவாகியது என்பதையும் நாம் அறிந்துகொண்டாதல் வேண்டும். குமரித் தமிழ் முதல் மாந்தக்குலம் புலம் பெயர்ந்து வடக்காகவும் வடமேற்காகவும் சென்று, நீண்ட நெடுங்காலங்கழித்து, அந்நாட்டுத் தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப நிறமும் திறமும் மாறி, அவருள் ஒருசாரார் ஆரியர் என்னும் பெயருடன் மீண்டும், சிறிய ஆசியா, பாரசிகம் வழியாக இந்தியா வந்தனர் என்பதை முன்னரே

கண்டோம். இந்தியாவின் வட-மேற்குப் பகுதியில் அவர் வந்த பொழுது, குமரித்தமிழ் வடபால் சென்று அங்குள்ள மாறுதல் களுக்கேற்ப, பிராகிருதமாக உருமாறி ஆண்டு வழக்கிலிருந்தது. ஆரியர் அக்கால் பேசிவந்த வேதமொழியுடன் பிராகிருதத்தையும் பிற தமிழ்வழக்கியற் சொற்களையும் கலந்து, சமசுக்கிருதத்தை உருவாக்கிக் கொண்டு, தென் பகுதிக்குப் படிப்படியாய்க் குடி யிறங்கி வந்தனர். சமசுக்கிருத ஆக்கத்தைப் பற்றிப் பாவாணர் இவ்வாறு குறிப்பர். "அஞ்ஞான்று, ஏற்கனவே பழைய வடதிரா விடம், பைசாசம், சூரசேனம், மாகதம் என்னும் மூவேறு பிரா கிருதங்களாகத் திரிந்திருந்தது. விந்தியமலைக்குத் தெற்கி லிருந்த மொழிகளெல்லாம் செந்தமிழும் கொடுந்தமிழுமா யிருந்ததனுல், அவை யாவும் திரவிடம் என்னும் ஒரு பிராகிருத மொழியாய்க் கொள்ளப்பட்டன! வேத ஆரியம் வழக்கற்றுப் போனபின், அதனொடு நாற்பிராகிருதங்களையும் சேர்த்தமைத்த அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழியே (Literary dialect) சமசுக்கிருதம்" (பாவாணர் - 'தமிழர் வரலாறு'.)

பின்னர் சமசுக்கிருதம் வழக்கூன்ற ஊன்ற, இந்தியாவில் வழங்கியிருந்த திரவிட மொழிகளெல்லாம், அம்மொழிக் கலவை யின் அளவிற்கேற்ப, தனித்தனித் திரவிடமொழிகளாக வடி வெடுத்தன. அவ்வகையில், மலையாளம், கன்னடம், துளுவம், படகம், இருளம், கோதம் என்பவை தென் திரவிடமொழிகளாக வும், தெலுங்கம், கொண்டா, கோண்டு, குவி, குயி, கோயா, கொலாமீ, துட, கதபா, பர்சீ, பெங்கோ, நாயக்கி, மண்டா, எருகலம் முதலியவை நடுஇந்திய திரவிடமொழிகளாகவும், மால்தோ, குடகம், பிராகுவீ, தங்கார், கூ, ஒராஒன், ராசுமகால் முதலியவை வட திரவிட மொழிகளாகவும் வழங்கத் தொடங்கின.

இனி, மேலே கூறப்பெற்ற மேலையாரிய, கீழையாரிய மொழி களிலும், பிற துரேனிய, சேமிய மொழிக் குடும்பங்களில் உள்ள உலக மொழிகளினும், இந்திய ஆரியரின் அரைச்செயற்கை நடை மொழியான சமசுக்கிருதத்திலும், இந்திய திரவிட மொழிகளிலும், முந்துதமிழ் வேர் சொற்களும், அவற்றின் முதனிலை வடிவங்களும் எவ்வெவ்வாறு போய், என்னென்ன சொல் திரிபு, பொருள் திரிபொடு வழங்கி வருகின்றன என்பதை, ஒப்பியன் மொழியாய்வு அடிப்படையில் விளங்கக் காட்டியும், அதே போல் தமிழில் கலந்த ஆரிய, பிறமொழிக் கலவைகளை விளங்கச் சுட்டியும் தமிழில் ஒரு விளக்கமான, சொற்பிறப்பியல் வரலாறு கூடிய ஓர் அகரமுதலி மிகமிக இன்றியமையாது தேவைப்படுகின்றது. மறைந்த

Scanned with CamScanner

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களே இத்துறையில் முற்றற உழைத்து முடிவான அவ்வகர முதலியைச் செய்து வெளிக் கொணர முப்பொழுதும் ஈடுபட்டனர். ஆனால் அந்தோ, அம்முயற்சிதான் முதற்கண்ணே முரிந்து முடமாகியது.

இனி, அதனை, மீண்டும் தொடங்கிச் செய்து, தலைநிறுத்துவார் யாவரோ என்று மிகவும் மனங்கவன்று நின்றிருந்தோம். காரணம் அவ்வினையில் ஈடுபடுவார்க்கு அளப்பரிய ஆய்வுத்திறனும், ஆராத் தமிழ்ப்பற்றும், இடையறு உழைப்பும், இயற்கையிலேயே வாய்க்கப்பெற்ற நுண்மாண் நுழைபுலமும், அதற்கேற்ப இலக்கிய இலக்கண ஈடுபாடு, பரந்த மொழியியல், மாந்தவியல், நிலவியல், வரலாற்றியல் அறிவும், பன்மொழி அறிவும், இயல்பின் அமைந்த ஊக்கமும், இனி இவையெல்லாவற்றிற்கும் மேல் தமிழ்மொழி, தமிழினமுன்னேற்றத்தில் அளவற்ற ஆர்வமும், அக்கறையும், தமிழ்நாட்டு விடுதலை உணர்வும், பொறுமை, பொருள் நசையின்மை, நடுநிலையுணர்வு, தன்னல மறுப்பு முதலிய அருங்குணங்களும், இனி இவற்றுடன், எந்தச் சூழலுக்கும் அடிமையாகாமல், அதனை விலக்கிக் கொண்டு தாம் கொண்ட குறிக்கோளில் ஒரு சிறிதும் நெகிழாமை, பகைக்கும் பழிக்கும் அஞ்சாமை ஆகிய மன வுறுதிப்பாடுகளும் அன்றோ வேண்டும். இத்தகைய ஒருவரைப், பொய்யும் போலிமையும், புகழ்அவாவும், பொருள் நசையும், ஏமாற்றும், தித்திருக்கமும் அரசியல் பூசல்களும், சாதி, மதவெறியும் உடைய இக்காலத்து எங்குப் போய்த் தேடுவது? மொழிஞாயிறு பாவாணருக்கும் இவ்வருந்திறன்கள் முற்றும் முழுமையாய் வாய்த்திருக்கக் கண்டிலமே! என் செய்வோம் என்று இயல்பாய எம் மொழி, இன, நாட்டுத் தொண்டுக்கிடையில் தீராத வருத்த முற்றுக் கிடந்தோம். — (தொடரும்)


## “தென்மொழி”

**சென்னை-5.**

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 45 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 25 ,, |
| தனியிதழ் : | 1·25 ,, | 3 ,, | 4[illegible] ,, |

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க!

# அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் நிற்காமல் தொடர்ந்து வெளிவரும் என்றும் அவ்வாறு வருவதற்கு அன்பர்கள் என்ன வகையான முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் கடந்த மாதத் தென்மொழி (சுவடி: 20;ஓலை 5-6)-இல் ஒரு திட்டம் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

அத்திட்டத்தை மீண்டும் கீழே தருகிறோம். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும், நிற்கக்கூடாது என்று விரும்பும் நன்னெஞ்சங்கள், அருள்கனிந்து இத்திட்டத்திற்கு ஒல்லும் வகையால் உதவ வேண்டுகிறோம்.

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு படிக்கின்ற ஒவ்வொருவரும் அல்லது இவ்விரண்டு இதழ்களும் தேவை என்று உணர்கின்ற ஒவ்வொருவரும் உடனடியாக ஆளுக்குப் பப்பத்து உறுப்பினர்களை (ஒவ்வொருவரும் அவரவர் படிக்கின்ற இதழ்க்கு)க் கட்டாயம் சேர்த்து உதவுதல் வேண்டும். பத்து உறுப்பினர்களைச் சேர்த்துத் தருபவருக்கு ஓராண்டு உறுப்பாண்மை இலவயமாக அளிக்கப்படும்.

2. 'தென்மொழி'க்கு வாணாள் உறுப்பினர் கட்டணம் உரு 200; தமிழ்ச்சிட்டுக்கு உரு: 120/-

பத்து உறுப்பினர்களைச் சேர்க்க இயலாதவர்கள் அவர்கள் படிக்கின்ற ஏதேனும் ஓரிதழுக்கு ஐந்து வாணாள் உறுப்பினர் கட்டணங்களை வாங்கி அனுப்புதல் வேண்டும். அத்தகையவர்க்கும் ஓராண்டு உறுப்பாண்மை இலவயம்.

3. இத்துடன் தங்கள் ஊரில் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' வரவில்லையானால், அங்கு 10 இதழ்களை வாங்கி விற்குமாறு முறைப்படி முன்பணம் கட்டும் முகவர் ஒருவரை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4. இவையன்றித் தாங்கள் இவற்றின் வளர்ச்சிக்கென விரும்பும் கனிசமான நன்கொடைகளைத்தரவும், இயன்றால் திரட்டி அனுப்பவும் வேண்டும். இந்நான்கு முயற்சிகளையும் தொடர்ந்து ஒரு மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் செய்து நிலையைச் சரி செய்தல் வேண்டும்.

போதுமான அளவு நிலை சரிசெய்யப் படாதபொழுது நாம் என்ன செய்வது? எனவே முடிவை அந்த விளைவுக்கே விட்டு விடுவோம். இவ்வகையில் ஈடுபடுபவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து இதழ்களில் வெளியிடப்பெறும்.

---

## பிழைதிருத்திப் படிக்கவும்!

இவ்விதழ் 14-ஆம் பக்கப் பாடல் 3-ஆம் பத்தியின் 4-ஆம் வரியில் 'சளிக்கிறான்' என்பதை 'சலிக்கிறான்' எனத் திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.

# தென்மொழி அன்பர்க்கொரு தெரிவிப்பு!

---

ஈரோட்டுப் பேராசிரியர் என்னைப் பற்றித் தாறுமாறாக, இல்லது புனைந்தும் உள்ளது வனைந்தும், பலவாறு, தம் கைக்கும் வாய்க்கும் வந்தவாறு எழுதிப் புறங்கூறும் வகையில், பற்பல மடல்களைத் தொடர்ந்து பலர்க்கும் அனுப்பி வருகின்ற செய்தியை, என் மேல் மிக்க அன்பும் அக்கறையும் நம்பிக்கையும் கொண்ட பலர், வருத்தத்துடன் அடிக்கடி எனக்குத் தெரிவித்து வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் தனித்தனியாக விளக்கங்கள் எழுதிக் கொண்டிருக்க எனக்கு நேரமிருப்பதில்லை.

காய்த்த மரத்துக்குக் கல்லடி விழுகின்ற அச் செய்தியைப் பற்றி எவரும் கவலுற வேண்டா.

பொதுநிலையில் உள்ளவர்களுக்கு இருக்கின்ற ஓர் உண்மை இடர்ப்பாட்டை அவர்களுக்கு விளக்கிக் கூற விரும்புகின்றேன்.

தனியார் வாழ்க்கை, வீட்டிலுள்ள ஒரு குடத்து நீரைப் போன்றது.

அதில் கையை வைக்கவும் யாரும் இடங்கொடுப்பதில்லை. குடிப்பதற்குரிய வகையில் உள்ள அதன் தூய்மையை எவரும் கெடுக்க ஒருப்படுவதில்லை, அதைப் போன்றது அவர்களது நிலை.

இனி, ஒருவாறு தனிவாழ்க்கையும், ஒரு சிறு அளவில் பொது வாழ்க்கையும் மேற்கொண்டவர் சிலருடைய வாழ்க்கை, ஒரு கிணற்று நீரைப் போன்றது.

குடிக்கப் பயன்படுத்தும் அதையே சிலர் குளிக்கவும், துணி துவைக்கவும், ஏனங்கள் கழுவவும் பயன்படுத்துவர்.

இவ்வகையில், ஒரு பகுதிநீர் உண்ணீராகவும் ஒரு பகுதிநீர் மண்ணீராகவும் (கழுவு நீராகவும்) அது கழிந்தொழியும். மண்ணீராக அதைப் பயன்படுத்தும் பொழுதும், அதைத் தனியே எடுத்துப் பயன்படுத்துவதால், கிணற்று நீர் மாசுபட்டு விட்டது எனக் கூறி விடவும் இயல்வதில்லை.

ஆனால், முற்றிலும் பொதுநிலையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர் வாழ்க்கை, ஓடிக் கொண்டிருக்கும் ஓர் ஆற்று நீரைப் போன்றது.

அதைக் குடிக்கப் பயன்படுத்துவாரும் இருப்பர்; அதிலேயே மூழ்கிக் குளிக்கப் பயன்படுத்துவாரும் இருப்பர். சிலர் அதில் ஆடைகளும் துவைப்பர்; ஆடுமாடுகளும் கழுவுவர். கீழ் மக்கள் சிலர் அதில் கால் மலமும் கழுவி விடுவர்! இருப்பினும் ஆற்று நீர் தூய்மை கெட்டதென்று எவரும் அரற்றி வருந்துவதிலர். ஒரு சிலர் வருந்தினும் அதை யாரும் பொருட்படுத்தவும் வேண்டியதில்லை.

என் வாழ்வும் அது போன்றதுதான்!

நான் குடத்து நீரைப் போன்றவனுமல்லன்; கிணற்று நீரைப் போன்றவனுமல்லன்; ஆற்று நீரைப் போன்றவன்.

இன்னும் சொல்வதானால் வயலில் இறங்கிப் பணியாற்று பவர்க்கே, சேரும் தூரும் படும்! வரப்பில் நின்று வாய்வீசிக் கொண்டிருப்பவர்களுக்கு அவை படுவதற்கு வாய்ப்பில்லை.

இன்று நேற்றன்று! கடந்த முப்பது ஆண்டுகளாகவே என் வாழ்வைப் பொதுப்பணிக்கே ஒப்படைப்புச் (ஈகம்) செய்து வருகின்றேன்.

அதனால் அகத்தும் புறத்தும் நான் கொண்ட இழப்பும், இடர்ப்பாடும், இழிவும் இகழ்வும், துன்பமும் துயரமும் கொஞ்ச நஞ்சமன்று; மலையினும் மாணப் பெரிது!

அவற்றுக்கெல்லாம் நான் மனம் சலித்தவன் அல்லன்; கலக்க முற்றவனும் அல்லன்.

நான் எடுத்துக் கொண்ட கொள்கைக்கென அன்று நிமிர்ந்த தலை இன்றும் தாழவில்லை.

அன்று தொடங்கிய நடை இன்றும் தளரவில்லை.

உறவாலும், நண்பாலும் நான் பட்ட கொடுமைகளை யெல்லாம் என் கொள்கைக்கு நான் கொடுக்கும் விலையாகவே கருதியிருக்கின்றேன். மேலும், அவற்றை அதற்கு இடுகின்ற நல்ல உரமாகவும் ஆக்கிக் கொண்டிருக்கின்றேன்.

தொடக்கத்தில் என் அன்பைக் குறை கூறியவர் சிலர்; உள்ளத்தை உண்மையில்லை என்று சுட்டவர் சிலர்; ஊன்றிய நடையில் நேர்மையில்லை என்று நகர்ந்தவர் சிலர்!

மெய்ப்பொருளியலில் இவற்றுக்கெல்லாம் வேறு விளக்கங்கள் இருந்தாலும், உலகியலில் இவற்றை விலக்கி விடுவதற்கில்லை.

எனவே, அவரமைத்த தடுப்புக் குண்டுகளிலும் குழிகளிலும் நான் தடுக்கி விழவில்லை என்று கண்டு, வெதும்பி, நான் கொண்ட கொள்கையைக் கோணல் என்றனர்; அதனைக் கொண்டு செலுத்தும் செயல் முறைகள் மேல் எள்ளலையும் இழிவையும் சாற்றி இகழவும் செய்தனர். கரவால் அதைச் சிலர் மறைக்கவும் முற்பட்டனர். கள்ளத்தால் அதன் பயனைச் சிலர் தமக்காகவும் ஆக்கிக் கொண்டனர்!

அந்தக் கதைகள் எத்தனை எத்தனையோ நடந்தன! ஆனால் கதைகளின் முடிவு, என் கொள்கையின் வெற்றி விழாவாகவே முடிந்தது!

தெரிந்தோ தெரியாமலோ இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன், தென்மொழியின் கொள்கை வரியில்,

Scanned with CamScanner

'அவர் செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை' என்று எழுதினேன்!

அப்பொழுது, அக் கேடுகள் என்னென்ன வகையில், எப்படி யெப்படியெல்லாம் வரும் என்று எனக்குத் தெரியாது!

இருப்பினும் ஏதோ ஓர் உள்ளுணர்வு வெளிப்பாட்டால், அவ் வரி உருவானது! அதன் உண்மைச் சூடு இன்றெனக்குத் தெரிகிறது!

நான் கொடுத்த சூளுரைக்கு, நானே பொருத்தமுடையவன் தானா என்று இயற்கை என்னை ஆராய்கிறது!

அதன் ஆராய்வின் முடிவை என்றுமே எவருமே மாற்றிவிட இயலாது! அதன் ஒவ்வோரணுவும், அதனதன் இயக்கமும் ஒரு கொள்கை நோக்கியே படைக்கப் பட்டிருக்கின்றது என்பதை நான் நன்கு அறிவேன்!

எனவே, இன்றும் என் நடையதிர்வு தளரவில்லை!

இக்கால், எனக்கென அமைக்கப்பட்ட என் எதிராளர்கள், என் உயிரெனும் ஒழுக்கத்திலும் பண்பிலும் இழுக்கைக் கலக்கின்றனர்!

என் அன்பிலும், அறிவிலும், கொள்கையிலும், கொண்ட பிடியிலும்பழுது காணப் போரிட்டுத் தோல்வியுற்றுப்போனவர்கள் அவர்கள்!

என் அன்பும், அறிவும், கொள்கையும் எனக்கு அண்மையிலும் சேய்மையிலும் இருக்கும் அனைவர்க்கும் விளங்கும்!

ஆனால், என் பண்பும், ஒழுங்கும் அனைவர்க்கும் விளங்குமா? பக்கத்திலிருந்து பழகியவர்களுக்கன்றோ விளங்கும்!

அனைவரும் பக்கத்தில் வந்து பழக வாய்ப்பில்லையே!

எனவே, சேய்மையிலுள்ளவர்க்கு என் வாய்மையைக் குறைத்துக் காட்டுகின்றனர்! என் தூய்மையில் களங்கம் ஊட்டுகின்றனர்!

வஞ்சித்துப் பழகியிருந்து இக்கால் நெஞ்சில் குத்துகின்றனர்!

அன்பர்கள் போல் நடித்த வன்பர்கள் அவர்கள்! அவர்கள் இதையே தம் வாழ்வாகக் கொண்டவர்கள்!

அவர்கள் வட்டியை முதலாக்குபவர்கள்! முதலையே வாழ்க்கையாக்குபவர்கள்! வன்சணார்கள்! புன்கண் பூசலர்!

அவர்களின் தோல்வி அவர்களுக்குத் தெரியாது! அவர்களின் வீழ்ச்சியையும் அவர்கள் உணரமுடியாது! அவர்கள் ஆண்டித் தோற்றத்து அலையும் நச்சரவங்கள்! குட்டை நெஞ்சின் நெட்டை நெடியோன்கள்!

Scanned with CamScanner

இந்த ஈரோட்டுக் குற்றெழுத்துப் பேராசிரியர் தனியராய்ச் செயல்படவில்லை!

சாதிவெறியும்,செல்வக் கொழுமையும், பொருமைப்புரையும், புறங்கூறும் புன்மையுமே வாழ்வாகக் கொண்ட ஓரிருவரால், ஆட்டிவைக்கப்படுகின்றார் எனத் தெரிகிறது!

தன்னம்பிக்கையும் தன்னறிவும் அற்ற அவர்கள் எவ்வகையிலேனும், எவ்விழிவிலேனும் என் போக்கை இடைமுரிக்க வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொண்டு செயல்படுகின்றதாகத் தெரிகின்றது!

அவர்கள் இவ்வாறு புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்ந்து கொண்டிருப்பதினும், சாதல் அறங்கூறும் ஆக்கந் தருமன்றே?

நடப்பது நடக்கட்டும்! நம்புவார் நம்பட்டும்!

அனைத்து அறிஞர் வாழ்க்கையினும் இந்நிலை இரண்டாம் நிலை!

ஆம்!

'எள்ளல், இழித்தல், ஏற்றல் — எனும் இம் மூன்று படிநிலைகள், இவ்வுலக மக்கட்கு உதவப் புறப்பட்ட வரலாற்று வாழ்க்கையினர்க்கு இயற்கை வகுத்துக் கொடுத்த வரம் பெல்லைகள்' என்பார் விவேகானந்தர்!

இதில் இரண்டாம் படிநிலையில் நான் வந்து நிற்கின்றேன்!

நீர் வழிப் படூஉம் புணைபோல், என் ஆருயிர் முறை வழிப் படுகிறது!

என் உயிரின் போங்கு நிலையினை நான் நன்கு உணர்வேன்! என் தொடக்கமும் முடிவும் எனக்குத் தெரியும்!

இனிமேல்தான் படிப்படியாய் என் கொள்கை இறுகும்! அக் கால் அவர்களின் குலைகளும் இறுகும்!

இனிமேல்தான் என் நடையும் அதிர்ந்து உரமேறும்! அக்கால் அவகர்ளின் நடையும் முடப்படும்! இஃது உண்மை! உண்மை!

நீங்கள் காணத்தான் போகின்றீர்கள்! வாய்மை வெல்லத் தான் போகிறது!

இறுதிக் காட்சிவரை பொறுத்திருங்கள்!

இடையில் வரும் காட்சிகளில் வல்லியன்கள் செய்யும் வாலாட்டங்களின் கெக்கலி ஓசையை இப்பொழுது கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்!

அவர்களின் கொக்கரிப்பு அடங்கும் நேரம் வரும்! அவர்கள் நடித்துக்கொண்டிருக்கும், அக் காட்சியின் திரை விழத்தான் போகிறது!

உலகம் என்னையும் நம் கொள்கையையும் உணரத்தான் போகிறது!

Scanned with CamScanner

தமிழினம் நம் கொள்கை வினையால் உய்யத்தான் போகிறது!

எதையெதையோ பேசியவர்களின் வாயும் முரசும், இக்கால் நம் கொள்கைகளையே பேசியும் ஒலித்தும் பிழைப்பெடுக்கின்றனவே, அதுவே அம்முடிவுக்குக் கட்டியங் கூறி நிற்கின்றது!

எனவே, மனக்கலக்க முறுபவர், நான் கொண்ட வினைக்கு விலகி நிற்கட்டும்!

நம்பிக்கையுடனும் நன்றியுடனும் என்னைப் பின் தொடர விரும்புபவர்கள் இனியும் தொடர்ந்து வரட்டும்!

அவர்கள் அடிமைகளல்லர்; ஆளப்போகிறவர்கள்! மடியர்களல்லர்; மண்வளம் காணப் போகிறவர்கள்!

இத்தனையாண்டுகள் பழகியவர்கள் ஒரு பித்தனின்-பேதையனின் பேச்சுக்கு மூச்சிரைக்கின்றார்கள் எனின் அவர்களின் தன்னறிவு எங்கே போனது? தனியுணர்வு என்னானது?

அவர்கள் என்னை நேரடியாக உணர்ந்திருந்த உணர்வுக்குப் பொருளென்ன?

அவ்வீரோட்டுப் பொதியரின் உடலசைவுகளைப் பார்த்தாலும் தெரியுமே பிறரை வஞ்சித்து வசை பாடியே அவ்வுடல்கள் வாழ்கின்றன, என்று!

எனவே,நம்பிக்கையோடிருங்கள்! நன்றியோடு தொடருங்கள்!

என் வாழ்க்கையின் மூலை முடுக்குகளை எல்லாமும் நானே ஒருகால் தெரியப்படுத்துவேன்! அக்கால் அவர்கள் காட்டும் சருகுகளுக்கிடையில் ஒளிந்திருக்கும் பச்சிலைகள் உங்கள் கண்களுக்குப் புலப்படும்!

அவர்கள் காட்டும் பாசிமணிகளுக்கிடையில் மறைந்திருக்கும் முத்து, வயிரங்கள் உங்கள் முன் விரிந்த இருளுக்கு ஒளி தரும்!

அதுவரை கடமையைத் தொடருங்கள்! அது நம் முன்னே விரிந்து, படர்ந்து நிற்கிறது!

அட்டாலும் பால்சுவையிற் குன்றாது? அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்!
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே;சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்!

கலக்கினும் தண்கடல் சேறாகாது!
எரிமலை தணலினும் விரிவான் கரியாகாது!
எனவே, அன்பர்கள் கவலுற வேண்டுவதில்லை!

அன்பன்
பெருஞ்சித்திரன்

Scanned with CamScanner

# இன்பத்-தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

வேலை யற்றயவன் ஆட்டு வாலை
அளந்து பார்க்கிறுன்! — ஒரு
வினையு மற்றவன் குப்பைச் சருகைக்
கிளறிச் சேர்க்கிறுன்!
நூலை விற்றவன் பதரை வாங்கி
நோம்பிச் சலிக்கிறுன்! — ஒரு
நொள்ளை மாந்தன் அவனுக் குதவி
நொடித்துக் களிக்கிறுன்!

உழக்கு மெய்யும் பதக்குப் பொய்யும்
ஒன்ருய் அளக்கிறுன்! — ஓர்
உண்மை தெரிந்து புன்மை சொரிந்து
உருவம் வளர்க்கிறுன்!
சழக்கு வினையைத் தேடித் தேடிச்
சல்லரி கொட்டுகிறுன்! — ஒரு
சாவை வேண்டிச் சவத்தை எரிக்கச்
சாணி தட்டுகிறுன்!

எச்சில் துப்பியே நெருப்பை அணைக்க
இருமிக் களைக்கிறுன்! — ஓர்
ஏரி நீரைத் துடைப்பக் குச்சியால்
கலக்கிச் சளிக்கிறுன்!
முச்சில் எடுத்தே ஆற்று மணலைச்
சலித்துப் புடைக்கிறுன்! — சில
மொழுக்கைக் கல்லை எடுத்துக் காட்டி
மதகை அடைக்கிறுன்!

கட்டிக் குளித்த சீலைத் துணியைக்
கசக்கிப் பிழிகிறுன்! — கைக்
கட்கத் துள்ள அழுக்கை எடுத்து
முகர்ந்து சுழிகிறுன்!
வட்டிக் கணக்கில் முட்டைச் சாம்பல்
பொதியை அவிழ்க்கிறுன்! முன்
வாந்தி யெடுத்த கலயந் தூக்கி
வழியில் கவிழ்க்கிறுன்!

நாட்டுக் குள்ளே இவனைப் போல
நல்லவர் உளரோ? — தமிழ்
நயத்தைப் படித்த இவனின் உள்ளம்
கயமையின் களரோ?
பாட்டுப் புலவன் வாய்மை உணரும்
பண்பும் அற்றவனே? — நறும்
பசுமைத் தமிழை இழிவில் தோய்க்கும்
பழியைக் கற்றவனே?

# நூல்நிறை

(சுருக்க மதிப்புரைக்கு நூலின் இரண்டுபடிகளும்
விரி மதிப்புரைக்கு ஐந்து படிகளும்
அனுப்ப வேண்டும்)

1. விழிமலர்கள் (பாடல்கள்)

ஆசிரியர்: ப. மணிவண்ணன்

வெளியீடு: கங்கை நூலகம் 29 வாலாசா சாலை,
சென்னை-600 002.

பக்கம்: 96; விலை: உரு. 7.

இஃதொரு பாநூல். இதில் 21 பாடல்களும், 'தைப்பாவை' எனும் குறும்பாட்டும் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. பாடல்கள் மரபு தழுவியும், மரபு நீங்கியும் இயற்றப் பெற்றுள்ளன. மரபுப் பாடல்கள் கற்பனை வளமும் கருத்து நலமும் மிளிர்ந்து தோன்றுகின்றன.

காற்றும் மழையும்
கடுகிவரும் புயலிடியும்
மாற்றமின்றி எந்நாளும்
மழைகொட்டும் பெருமுகிலும்
ஏற்றப் பெருவரையும்
எழுந்தாடும் கடலையும்
ஆற்றலுடன் நிற்கும் வரை(உன்)
அருந்தமிழும் நிலைத்திருக்கும்!

— என்பது ஒரு மரபுப்பா. இதிலும் ஒரு சீர்த்தட்டு!

'நான் இந்த நாட்டு மன்னர்களின் உடம்பில் மிச்சமிருக்கும் ஒரே அணிகலன்' — இவ்வுரை வரி மடக்கிப் போட்டு எழுதப் பெற்று மரபுப்பாவாய்த் திகழ்கிறது. இரண்டுக்கும் உள்ள வேற்றுமையை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம்.

கற்பனையும் கருத்தும் யாப்பு நூலில் கோக்கப் பெறும் பொழுதே பாட்டு மாலையாகிறது. மற்றபடி அவை உதிரிகளே! உதிரிப் பூக்கள் மாலையாகி விடுமா, என்ன? மாலை என்று சொல்கிறார்கள் புதுப்பா புனைவோர்கள். காலந்தான் உறுதிகூற வேண்டும். பாவலரின் பாட்டுத்திறத்தைப் பாராட்டுகிறோம். நிலைத்து நிற்க

Scanned with CamScanner

வேண்டுவன பாடல்கள்! நாமாக நம்மை நிறுத்திக் கொள்ள முடியாது. உறுதி உள்ளதுதானே நிற்க முடியும்.

2: சிவப்புக் கனவுகள் (பாடல்கள்)

ஆசிரியர் : சங்கை மு. வேலவன்

வெளியீடு : குலமகள் அச்சகம், திருப்பரங்குன்றம்.

பக்கம் : 48; விலை : உரு. 2.

28 பாடல்களின் தொகுப்பு நூல் நல்ல கற்பனை. சீர்திருத்தக் கருத்துகள் நிறைந்த பாடல்கள், பேச்சுச் சொற்கள் மலிந்துள்ளன. பல பாடல்கள் அதன் கூற்றுக்குச் சான்று பகரவில்லையே-ஏன்? கருத்துகளுக்காக ஆசிரியரைப் பாராட்டலாம்!

3. பெரியார் நூறு (பாடல்கள்)

ஆசிரியர் : மதுரை தமிழ்நாடன்.
வெளியீடு : தமிழாலயம், 401. பெரியார் நகர், மதுரை-1.
பக்கம் : 20; விலை : 1.25.

நூறு நேரிசை வெண்பாக்களால் ஆன இனிய பாடல்கள் கொண்ட நூல் இது. கருத்துகள் நிறைந்து விளங்குகின்றன. நூறு பாடல்களுள் 32 பாடல்கள் பெரியாரின் சிறப்பை விளக்குகின்றன. பிற பாடல்கள் அன்னை மணியம்மை, கடவுள், மதம், சாத்திரம், சோதிடம், சாதி, பார்ப்பனர், பெண்ணடிமை, இந்தி, தமிழீழம் பற்றி எழுதப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் கருத்துச் செறிந்த ஒவ்வொரு தலைப்பு தரப்பெற்றிருக்கிறது. 'அடிமைத் தளையறுத்தவன்' என்னும் தலைப்பில் உள்ள பாடல் இது :

வெடிமருந்துச் சாலை விளைகழனி உண்மை
குடியிருந்த கோயில் குளிர்வான் — அடிமைத்
தளையகற்ற வந்த தலைவன் மதமாம்
களையகற்ற வந்த கனல்.

சில பாடல் வரிகளில் தளை தட்டுகின்றது. எடுததுக் காட்டு :

'இறைநம்பிக்கை இருக்கும் வரைக்கும்' — என்பது ஓர் அடி, சீரே பிழையாக உள்ளதே! பல பாடல்களில் செப்பலோசை குறைகிறது. கொஞ்சம் கவனமுடன் பார்த்து வெளியிட்டிருந்தால் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம். அடுத்த பதிப்பில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

— தொடர்ச்சி 25-ஆம் பக்கம்பார்க்க

Scanned with CamScanner

# பொருநைக் கரையில் புதையுண்ட நாகரிகம்.

— சித்திரம் —

**வடிவேல் இராவணன்.**

— இங்குக் கிடைத்துள்ள தாழிகளை முதுமக்கள் தாழி என்பர்.
— தமிழகத்தில் ஐம்பது இடங்களில் இத்தகைய தாழிகள் கிடைத்துள்ளன. ஆதித்த நல்லூர்த் தாழிகளே சிறந்தவையாகக் காணப் படுகின்றன.

— புதைகுழிகள் நான்கு அடிமுதல் ஒன்பது அடிவரை அகலமும், ஆறு அடிமுதல் பதினைந்து அடிவரை ஆழமும் உள்ளவை. இப் புதை குழிகளில் நான்கு அடி முதல் பதினோரடி வரை உயரமுள்ள தாழிகள் கிடைத்துள்ளன.

— இத்தாழிகளுள் வைத்துச் சவங்கள் புதைக்கப் பெற்றன. இவற்றுள் மாந்த எலும்புகளே காணப்படுகின்றன. பிணங்கள் உட்கார்ந்த நிலையில் உள்ளன. தாழிகளின் வாய்கள் அகன்றுள்ளன. தாழிகளுக்கு மூடிகளும் உள்ளன.

— சில தாழிகள் மீது நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. உள்ளே மக்கள் பயன்படுத்திய படைக்கலன்கள், வெண்கல ஏனங்கள், மட்பாண்டங்கள் காணப்பட்டன.

— சிலவற்றில் பொற்பட்டங்கள் இருந்தன. சிலவற்றில் வேல், ஈட்டி, வாள், மூவிலைவேல் ஆகிய படைக்கலகங்கள் இருந்தன.

— தாழிகளில் இருவகைகள் உள்ளன. வாயகன்று அடி குவிந்திருக்கும்; கனத்தவை; குதிர் போலுள்ளவை, கரடு முருடானவை.
— மற்றொரு வகை பானைபோல் கழுத்தமைந்த தாழி. தோற்றமும் வேலைப்பாடும் நன்றாக அமைந்திருக்கும். வாய் சிறிது; உடல் நீளமானது. கழுத்து நீண்டது; தோள் சச்சிதமாயிருக்கும். அடிசிறுத்து, தோள்வரை அகன்றிருக்கும், பெரும்பைபாறு, பல்லாவரம் ஆகியவிடங்களில் கண்டெடுக்கப்பட்டவை இவற்றினின்றும் வேறானவை.

— கேரளத்தில் மலபார் மாவட்டத்தில் கறுப்பு வண்ணத் தாழிகள் கிடைத்துள்ளன. ஆதித்த நல்லூர்த் தாழிகளிலிருந்து அதிக வேறுபாடுடையவையல்ல.

— ஆதித்தநல்லூர்த் தாழிகளைப்போன்று பல்லாவரம், பெரும்பையாறு, பழையகாயல், அரப்பா முதலியவிடங்களில் கிடைத்த தாழிகள் அனைத்தும் கருஞ்சிவப்பு வடிவத்தில் காணப்படும்

Scanned with CamScanner

பொழுது மலபார் மாவட்டத்திலுள்ள தாழிகள் மட்டும் கறுப்பு வண்ணம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

— ஆதித்த நல்லூரில் கலன்கள் கறுப்பு வண்ணத்தில் உள்ளன. தாழிகள் கறுப்பு வண்ணத்தில் காணப்படவில்லை. ஆதித்த நல்லூர்த் தாழிகளும் ஒத்தவையாகக் காணப்படுகின்றன.

— அரப்பாத் தாழிகள் நான்கடி உயரம் உள்ளனவாகக் கழுத்தின்றி வாய் அகன்று நுனி கூம்பியதாகக் காணப்படுவது வியப்பாக உள்ளது.

— இவை ஆதித்த நல்லூர்த் தாழிகளின் எதிரொலிப்பு என்பதில் சிறிதும் ஐயமில்லை.

— அரப்பா, மொகஞ்சதாரோ முதலியவிடங்களிலுள்ள மூடப்பட்ட கல்லறைப் புதை குழிகளும் (Cist Burials), சாடிப் புதையல்களும் (Jar Burials), கல்லறைகளிலும், புதைகலன்களிலும் தாழிகளிலும் போட்டுப் புதைக்கும் வழக்கத்தைக் காட்டுகின்றன.
— தமிழகம், தென்கிழக்கு ஆசியநாடுகள், பாரசீகம், மெசபத்தோமியா, நண்ணிலக் கடற் பகுதிநாடுகள், பாஃரைன் தீவுகள் ஆகிய நாடுகளில் புதைக்கும் வழக்கமே இருந்தது.

— பிணங்களைத் தாழிகளிலிட்டுப் புதைக்கும் சீரிய முறை தமிழகத்தில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிலவி வந்த முறையாகும்.

— ஆதித்த நல்லூரில் அகழ்ந்து கண்ட தாழிகளும், அவற்றின் உள்ளிருக்கும் எலும்புகளும், பொற்பட்டங்களும் இரும்புக் கருவிகளும், வெண்கலப் பொருள்களும், பிறவும் இதனை உறுதிப் படுத்துகின்றன.

வாழ்ந்து செழித்த வண்டமிழ்ப் பேரினத்தின் எச்சங்கள் இன்று மண்மேடாய்க் காட்சி தரும் கோலம்.

பத்தாயிரம் ஆண்டுக்கு முந்திய பாங்கான தமிழர் வாழ்வுக்குச் சான்றாய் விளங்கும் வரலாற்றுக் குன்றம்.

ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னே மொழி பயின்று, அறிவுக்கெட்டா இலக்கிய இலக்கணங்கள் தோற்றி, அறிவியல் வளர்த்து, கலையியல் பயிற்றி, கவினுறு அகப்புற வாழ்க்கை கண்டு, மெய்ப்பொருளறிவு மிகவும் பெற்றுப் பாராண்ட தமிழ்ப் பேரினத்தின் வரலாற்றைப் பாருக்குணர்த்திய பழந்தமிழ் நாகரிகம் பொருநைக் கரையில், அங்கே, புதையுண்டு கிடக்கிறது. 0

(முற்றும்)

# தென்மொழியே வேண்டும்!

பாவலர்
கருவூர் பாரி.

பண்டுபுகழ் மிக்குடைய பைந்தமிழின் சீர்மை
பழுதுபடா வகையினிலே பல்லாற்ற லானும்
கண்டுநிகர் தனித்தமிழில் கவின்பலவும் மேவ
கண்ணிருந்தும் குருடரெனக் கலங்கி இவண் மாளும்
வண்டமிழர் தங்கட்கே வகைதொகையாய் ஆக்கி
வைத்ததுவும் வைப்பதுவும் வாழ்வதுவும் ஆன
தொண்டுமொழிப் பட்டறையாம் தென்மொழியை மூடத்
தோதுபல பார்ப்பதுவோ? துயர்மிகுக்கு தய்யோ?

அற்றைமொழி நன்னடையில் ஆர்த்தெழுந்து வந்தே,
அறவுரையை அறிவுரையை அன்றாடும் ஈங்கே
குற்றமறச் சொன்னவர்கள் கொழுகொம்பாய் நின்றார்
கூறுவிரோ, எத்தனைப்பேர்? கூப்பிடுங்கள் பார்ப்போம்!
வெற்றுரையும் வீணுரையும் வீசுகின்றார் எல்லாம்
வேட்டுவைக்கக் காத்திருப்பார்! தென்மொழியைக் காக்க
உற்றவர்கள் உண்டோகாண்! ஒண்டமிழ்க்கே என்ற
உயர்தமிழப் பட்டறைக்கா மூடுவிழா? என்னே!

தூய்தமிழில் பாப்புனைவார்; கட்டுரைகள் சேர்ப்பார்;
தனித்தமிழே வேண்டுமெனத் தகவுரைகள் செய்வார்;
ஆய்ந்தாய்ந்தே மறைமலையார், பாவாணர் ஒற்றி
அரும்புலமை யுற்றபெருஞ் சித்திரனார் தம்மால்
வாய்ந்தாரே இத்தமிழம் வாழ்வாங்கு வாழ!
வாழ்த்துவமே! எனவுரைக்கும் போழ்தினிலே தாஞ
ஏய்ப்பாரும் இடம்வாய்ந்தால் ஏற்றுகின்றார் தாமும்
எக்காளம் கொட்டற்குப் பட்டறையை மூடல?

நெஞ்சினிக்கப் பண்ணுவதும், நேர்ந்தாரின் உள்ளம்
நெக்குருகிப் போமாறு நிறைதமிழால் மெல்லக்
கொஞ்சுவதும் குலவுவதும் கொக்கரிக்கும் வேற்றார்
கொடுமொழியை அப்புறத்தே கள்ளியெறிந் தெற்றும்
நெஞ்சுரத்தைப் பெற்றதுவும் நெகிழ்ந்தென்றும் மாற்றார்
நினைவொற்றிக் கரவுற்று நிலைகுலைந்தும் போகா
விஞ்சுபுகழ் கொண்டதமிழ்ப் பட்டறையாம் எங்கள்
விருப்புநிறைத் தென்மொழிக்கா மூடுவிழா? வேண்டா?!

தென்மொழியார் நாங்களெலாம்! தேம்புதலில் லாத
தனித்தமிழின் தலைமக்கள்! தரங்கெட்டார் பேசும்
புன்மொழிக்கும் ஏமாற்றுப் புகழ்மொழிக்கும் ஈங்கே
பொக்கெனயாம் வீழ்தலில்லை! போய்ச்சோர்தல் இல்லை!
என்மொழியும் எந்தமிழ்க்கே ஈடின்றாம்! என்றே
எக்களிக்கும் போழ்தினிலா எதிர்பாரா வாறு
தென்மொழிப்பட் டறைமூடத் தேர்கின்றீர் நாளை?
தேப்பிடச்செய் தல்வேண்டா! தென்மொழியே வேண்டும்!

Scanned with CamScanner

தொடர் : 22

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்

## இளமை பெற வழிகள்

### உறுப்பு மருத்துவ முறை :

கிழவரை இளைஞராக்க இவ்வுலகம் தோன்றியதிலிருந்து இன்றுவரை விடாது முயற்சி செய்யப்பெற்று வருகின்றது. மாயங்கள், மருந்துகள், தாயத்துகள், வெறியாட்டங்கள் அப்பப்பா எத்தனை வகைகளைக் கைக் கொண்டனர், கொள்கின்றனர், கொள்வார்களோ, மக்கள்! மருத்துவரிலிருந்து இரசவாதி வரை மக்கள் மூட்டிப் பார்த்து விட்டனர்-கண்ட பயனைத்தான் நாம் அறிவோமே.

அகவையின் முதிர்ச்சியால் ஏற்படும் தளர்ச்சி இரண்டு வழிகள் மூலமாக ஏற்படலாம். ஒன்று களைப்பு; முதன்மையான உறுப்புகளின் உயிர் அணு தொகுப்புகளிலும் அமைப்பிலும் ஏற்படக் கூடிய தேய்வுகள், மாற்றங்கள் ஆகியவற்றுடன், இவ்வுறுப்புகள் நல்ல நிலையில் வேலை செய்யவும் இருக்கவும் உதவும், பல சுரப்பிகளிலிருந்து சுரக்கப்படும் நீர்களின் குறைவும் சேர்ந்துதான் இரண்டாவது காரணமாகும். களைப்பைத் தூய்மையான, அமைதியான வாழ்க்கையின் மூலமாகவும், இன்பமான சுற்றுப் புறத்தின் மூலமாகவும், மனத்தை ஒருவழிப்படுத்துவதின் மூலமாகவும் போக்கலாம். இரண்டாவது காரணத்தை அகற்ற சில காலத்திற்கு முன்வரை, எவ்வகை மருத்துவமும் இவ்வுலகம் அறிந்திலது என்றே சொல்லலாம். சில காலத்திற்கு முன்புதான் இவ்வுலகம் மாந்த உடலின் உள்ளே உள்ள சுரப்புகளைப் பற்றியும், அவற்றில் சுரக்கப்படும் நீர்கள் பற்றியும், நீர்களின் தன்மைகள் பற்றியும் அறிந்தது. மாந்தனுக்கு அகவை ஆக ஆக அலித்தன்மை தானே வந்தடைகிறது. இளமையில் வேலை செய்த சில உள் சுரப்பிகள் அல்லது தூம்பற்ற சுரப்பிகள் அகவை முதிர்ந்த உடன் வேலை செய்வதில்லை. இச்சுரப்பிகளின் கைகளில்தாம் மாந்தனின் கலவி வேலைகள் அடங்கி உள்ளன. அகவை ஏற்றத்தால் அவை வேலை செய்யாது நின்று விடுவதால் கலவி வேலைகளும் நின்று விடுகின்றன. இளைஞன் ஒருவனின் இச் சுரப்பிகளுக்குக் கேடு உண்டானால், அகவையில் இளைஞனாக இருப்பினும், கலவி வேலையைப் பொருத்த மட்டில் கிழவனேயாவான். இச் சுரப்பிகள் தங்கள் அகவை வரம்பையும் கடந்து, நல்ல நிலையில் வேலை செய்து கொண்டிருப்பின், அச் சுரப்பிகளுடைய கிழவர், தம் தள்ளாத அகவையில்கூட முழுஆண்மையுடன் விளங்குவார். இச்சுரப்பிகளில்

கோளாறு பிறவியிலேயே ஏற்படலாம். அஃதாவது, இச்சுரப்பிகள் பிறக்கும் பொழுதே மிகச் சிறியனவாய் இருக்கலாம். மற்றும், நோய்களாலும், இடர்களாலும், அகவை ஏற்றத்தாலும் இச்சுரப்பிகளில் கோளாறு ஏற்படலாம். சுரப்பிகள் வடிவில் மிகச் சிறியனவே. உருவம் கண்டு எள்ளற்க, உருள் பெருந்தேருக்கு அச்சாணி அன்னார் உடைத்து என்ற பொய்யா மொழிகளை மெய்ப்பிப்பது போன்று இச்சுரப்பிகள் முதன்மைத் தன்மை வாய்ந்தவை. இச்சுரப்பிகள் உடல் முழுவதும் சிதறிக்கிடக்கின்றன. இச்சுரப்பிகள், குருதி ஓட்டத்திலிருந்து சில பொருள்களை எடுத்து, அப்பொருள்களைக் கொண்டு, உடலுக்கு வேண்டிய பல பொருள்களை உண்டாக்கி, வழங்குகின்றன. இப்பொருள்கள் வாழ்க்கை நடைமுறைக்கு மிக மிக இன்றியமையாதன. சுரப்பிகளில் இரண்டு வகை உண்டு. தூம்புள்ள சுரப்பிகள் ஒருவகையைச்சார்ந்தன. அவை சுரப்பிகளில் உண்டாக்கப்பட்ட பொருள்களை உடலுக்கு வெளியே கொண்டு செல்கின்றன. அல்லது உடலுக்கு உள்ளேயே வேறு ஒரு பகுதிக்கு எடுத்துச் செல்கின்றன. மற்றொருவகை தூம்பற்ற சுரப்பிகள் எனப்படும். அவற்றை உள்சுரப்பிகள் என்றும் அழைக்கலாம். இச்சுரப்பிகளிலிருந்து வரும் நீர் 'கார்மோன்' எனப்படும். இவ்வேதிச்சுரப்பு (கார்மோன்) வன்மை கொடுக்கக் கூடிய, வேதிப பொருள்களால் ஆன ஒன்றாகும். இவ்வேதிச்சுரப்பு, குருதி ஓட்டத்திற்கோ அல்லது நிணநீர் ஓட்டத்திற்கோ வந்தடைகிறது. அங்கிருந்து உடலின் பல பகுதிகளை அடைகிறது அவ்வோட்டங்களிலிருந்து உறுப்புகள் தங்களுக்கு வேண்டியவேதிச்சுரப்புகளை எடுத்துக் கொள்கின்றன.

சில சுரப்பிகள் உடலில் உள்ள பெரும்பான்மையான உறுப்புகளையும், உடலின் வேலைகளையும் அடக்கி ஆளுகின்றன. 'பிட்யூட்டரி' சுரப்பி பல உறுப்புகளின் வேலைகளைக் கட்டிக் காக்கின்றது. கலவி வேலைகளுக்குப் பயன்படக் கூடிய வேதிச்சுரப்புகள் முன்பக்க பிட்யூட்டரியிலிருந்தும், கோனேட்டுகளிலிருந்தும் கிடைக்கின்றன; சிறிது அளவில் பின்பக்க பிட்யூட்டரியிலிருந்தும் 'தைராயிடி'லிருந்தும், அட்ரினலிலிருந்தும், மற்றும் சில சுரப்பிகளிலிருந்தும் கிடைக்கின்றன. முன்பக்க பிட்யூட்டரி, கலவி வினையைப் பொருத்த மட்டில் மிக மிக முதன்மையானது. அத்துடன் அஃதை உடலில் உள்ள சுரப்பிகளுக்கெல்லாம் தலைவன் என்றும் கூறலாம். அதன் பல வேலைகளுள், குருதி அழுத்தத்தை ஒழுங்குபடுத்த உதவுவதும் ஒன்றாகும். அஃது அமைந்திருக்கும் இடம் தலையின் நடுவமாகும். பார்த்தீர்களா! எவ்வளவு காவலான இடம் வெளியிலிருந்து கேடு இச்சுரப்பியை எட்டிக்கூடப் பார்க்க முடியுமா! இயற்கை அன்னையின் இரக்கம்தான் என்னே!

களைப்பு, அலித்தன்மை, மூப்பு ஆகிய இவற்றுக்குள்ள தொடர்பை, விளக்கமாகக் கூறின், அஃதாவது அகவை முதிர்வால்

ஏற்படும் மாற்றங்களுக்கும் சுரப்பிகளுக்கும் உள்ள தொடர்பை நாம் அறிந்தோமானால், மூப்பை எப்படி வராமல் தடுப்பது என்பது பற்றி ஒரு முடிவுக்கு வரலாம். எவ்வாறு எனில் எந்தச் சுரப்பியின் காமேன் குறைவாக இருக்கின்றதோ அந்த சுரப்பை உடலில் செலுத்தி மூப்பைத் தடுத்து நிறுத்த முயன்று பார்க்கலாம். இம்முயற்சியை அறுவைமுறை, உறுப்பு மருத்துவமுறை என இருவகையாகப் பிரிக்கலாம். நோய்வாய்ப்பட்ட அல்லது பழுதடைந்த சுரப்பிகளை அறுவைமுறை மூலம் நலமாக்கி, அவற்றின் இயற்கையான வேலைகளைச் செய்யும்படி செய்யலாம். நோய்வாய்ப்பட்ட அல்லது பழுதடைந்த அச்சுரப்பிகளை நீக்கி விட்டு, நல்லநிலையில் உள்ள சுரப்பிகளை அந்த இடங்களில் பொருத்தலாம். பழுதுபார்க்கப்பட்ட அச்சுரப்பிகளிலிருந்து வேதிச்சுரவுகள் சுரந்து மூப்பின் மாற்றங்களை எதிர்க்கின்றன. இஃது அறுவைமுறை எனப்படும். எந்தச் சுரப்பு குறைவாக இருக்கின்றதோ அந்தச் சுரப்பை, இடைவெளி விட்டு விட்டுத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே வரவேண்டும் சுரப்பை மாத்திரையாக உட்கொள்ளலாம். அல்லது ஊசியின் மூலம் தோலின் கீழே செலுத்தலாம். இஃது உறுப்பு மருத்துவமுறை எனப்படும்.

**உறுப்பு மருத்துவமுறையினால் நன்மை**

உறுப்பு மருத்துவமுறை ஒரு புதுவகையான மருத்துவ முறையாகும். சில நோய்களுக்கு இம்முறையால் நல்ல பயன் உண்டாகிறது. எடுத்துக்காட்டாக கேடயச்சுரப்பு (Thyroid) குறைவால் ஏற்படும் குள்ளத்தன்மை, கேடயச்சுரப்பு நீர்கொடுத்தவுடன் விலகுகிறது. அலித்தன்மைக்கு இம்முறையால் நன்மை உண்டானால், அழுத்தம், திருத்தமாக ஆம் என்று சொல்ல இயலாது. நன்மை உண்டு என்று மட்டுமே சொல்ல இயலும்.

பிரௌன் சிகுவார்டு, பிரான்சு நாட்டில் வாழ்ந்த ஓர் ஆங்கிலநாட்டு மருத்துவர். 1819-இல் அவருக்கு அகவை 72. அந்த அகவையில் இளைஞன் போன்று ஆக வேண்டும் என்ற பேரவா உண்டாயிற்று. எண்ணினார், பலமாதங்களாக எண்ணினார். பின் ஒரு முடிவுக்கு வந்தவராக, ஒரு விலங்கின் வித்தை சாறு பிழிந்து அதை ஊசியின் மூலம் தன் உடம்பில் செலுத்தினார். சிறிதுநேரம் சென்றபின், எழும்பிக் குதித்தார், ஆடினார், பாடினார். புத்துயிர் பெற்றேன், புத்துயிர் பெற்றேன் என்று உரக்கக் கூவினார். அவர் இளைஞராக மாறி விட்டதாக நம்பினார். அவருக்கு ஆற்றல் பெருகி விட்டதாக நம்பினார். நன்றாக உண்டார்; உறங்கினார்; மலம் ஒழுங்காகக் கழித்தார். இந்நிகழ்ச்சி தான் உறுப்பு மருத்துவ முறையின் தொடக்க விழா.

பிரௌன் சிகுவார்டு குறிப்பிட்ட நன்மைகள், வித்தின் பொருள்களால் அன்று; மனத்தின் நினைப்பே அன்றி மற்றன்று என அவர் கால பிற மருத்துவர்கள் கூறினார்கள். ஆயினும், பிரௌன் சிகுவார்டு தம் ஆராய்ச்சியை விடாது தொடர்ந்து

# தனித்தமிழை வளப்படுத்த இல்லறத்தாரே வாருங்கள்!

(15-4-84-இல் புதுவையில் நடந்த தனித்தமிழ் இலக்கிய மாநாட்டில், பாடிய பாட்டரங்கப் பாட்டில் சில பகுதிகள்.)

— தரங்கை பன்னீர்ச்செல்வன்

(பன்னிருசீர் ஆசிரியர் மண்டிலம்)

குலச்சிறையாம் இருள்முழையுள் அறியாமை என்னும்
கொடுஞ்சேற்றில் சிக்குண்டு, சீரழிந்த தமிழக்
குமுகாயம் விழிப்புற்று வீறுநிறை கொள்ள
புலச்சுடராய் ஒளிபரப்பிப் பகுத்தறிவுக் கனலாய்ப்
பூரியத்தை—ஆரியத்தைப்—போராடி அழித்த
பூட்டனாராம் பெரியாரின் புடப்பொன்னாங் கருத்தைப்
பலச்சுளையாய்ப்—பகுத்தறிவுத் தேன்குழலாய்—நாளும்
படைத்தளிக்கும் பன்னீரின் முன்னோடி, எங்கள்
பாட்டனாராம் பாவேந்தர் ஐயாவும் பிறந்த.
நலச் செழிப்புப் புதுச்சேரி நல்லோரே, தமிழின்
நலன்பேணும் தனித்தமிழ்க்க ழகத்தோரே, தமிழ
நாட்டினத்துப் பெருமக்காள், நல்வணக்கம், வாழ்க!

அல்லறத்தைத் தமிழர்க்கே ஓதியோதி அலுத்தே
அடங்கிவிட்ட ஆரியத்தைப் - பெரியாரின் உழைப்பால்
அடிக்கலுற்ற நச்சரவை - மீண்டுமெழச் செய்த
நல்அரத்தச் சூடில்லா நாய்த்தீனிக் கும்பல்
நாடாள நேர்ந்ததனால் - நம்மிலுள்ள மூடர்
நாடாள விட்டதனால் - இந்நாட்டில் வாடும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

நடத்திச் சில வேதிச்சுரப்பு(Hormones)களைக் கண்டுபிடித்து உறுப்பு மருத்துவ முறைக்கு அடிகோலினர். தொடக்கத்தில் இம்முறை மிக்க பயனுடையது என நம்பினர். நாளடைவில் அவர்கள் நினைத்த நன்மை கிடைக்காது போகவே இம்முறை பயனற்றது எனக் கைவிட்டனர். பல ஆண்டுகளுக்குப்பின் இம்முறையின்மேல் மருத்துவர்களின் கடைக்கண் நோக்கு பட்டது. பலர் முனைந்து வேலை செய்து, இம் முறையால் கிடைக்கும் நன்மைகளை நுணுகி ஆராய்ந்தனர். தொடக்கத்தில் இம்முறையின் பேரில் ஏற்பட்ட பழி யாதெனில் இது கலவித்தொடர்பு உடையது என்பதேயாகும். உண்மையில் இளமை பெறல் என்பது உடல் முழுவதுமே முறுக்குப் பெற்று நன்னிலையில் இருத்தல் என்பதுதான். அதில் பால் தொடர்பு உடையது ஒருசிறு பகுதியேயாகும். வேதிச்சுரவுகளின் குறைவால் ஏற்படும் கேடுகளுக்கு, அந்த அந்த கார்மோன்களை உடலின் உள் செலுத்தினால் அக்கேடுகள் விலகி விடுகின்றன என்பது எவ்வகை ஐயத்திற்கும் இடமின்றி மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

(தொடரும்)

Scanned with CamScanner

இல்லறத்தார் - தனித்தமிழ இனமாந்தர் - தாமே
எத்தனெல்லாம் புத்தனென்றே ஏமாறிப் போனார்:
இனப் பகைவர் உயர்வதற்கே இருப்போமென் றுனர்:
புல்அறத்தை நீட்டிடுமோ? பொய்புராணப் பூணூல்
பொதுமைவழி காட்டிடுமோ? திரைநடிப்புக் காட்சி
புரட்சித்தீ மூட்டிடுமோ? இனமானக் கேடே!

ஓயாமல் உழைத்துழைத்தே ஓடாகிப் போனார்:
உள்நோக்கப் பார்ப்பனர்க்கே உறவாக லானார்:
'ஒப்போலை' வேட்டோர்க்கு விலைகூறி விற்றார்:
வாயாமல் போகாது தலையெழுத்தே என்ற
வஞ்சகரின் பொய்க்கூற்றை மெய்யெனவே கொண்டார்:
வரலாற்றைத் திரித்தோரை வழிகாட்டி என்றார்,
தாயாகிப் பேணுகின்ற செந்தமிழ்த் 'தென்மொழியைத்'
தக்கவ்கை புரக்காமல் தடமாறிப் போனார்:
'தமிழ்ச்சிட்டை' வளர்க்காமல் முடமாக்க லானார்!
ஆயாமல் - அரசியலில் ஆதாயந் தேடும் -
அன்றாடம் தில்லிக்குக் காவடிப்பாப் பாடும் -
அடிமையரைத் தலைவரென அடிவருடி ஏற்றார்;

தந்நலத்தால் இனநலத்தை மொழி நலத்தை மறந்தார்;
தம்மனைவி மக்களெனக் குறுவட்டம் போட்டார்;
தமக்குவந்த வாய்ப்பெல்லாம் இறைவனருள் என்றார்;
எந்நிலத்தும் தமிழரைப்போல் மொழிப்பற்றை இகழ்வோர்
இல்லறத்துத் தலைமக்கள் — இனியசெம் மொழியர் -
ஈடில்லாத் தாய்மொழியைப் பேணுதார் - இல்லை;
இந்நிலத்தில் ஏதிலியாய்ப் பிழைக்கவந்த பார்ப்பான்;
ஈண்டிருந்த மழமதியர் புலச்சலவை செய்து
இழிந்ததம் தாய்மொழியைத் தேவமொழி என்றான்;
நந்நிலத்தில் நம்மொழியில் தம்மொழிச்சொல் கலந்து
நம்மொழிச்சொல் மறையுமாறு நயமாகச் செய்தான்;
நடித்தோரை நம்பிவிட்டார்; தனித்தன்மை இழந்தார்!

நல்லறிவுக் குடும்பத்து நாயகர்காள், வாழ்க்கை
நாடகத்தை அரங்கேற்றும் நாயகிகாள்: தமிழ
நாட்டினத்துத் தாழ்வுக்கு மொழிகலப்பே வித்து:
நல்வரவாய் மறைமலையார், தேவநேயர் முனைந்து
நலிவுற்ற தமிழ்மீட்டார்; பாவலரே(று) ஐயா
நமக்கெல்லாம் நாள்தோறும் வழிகாட்டு கின்றார்:
தொல்வரவுச் செல்வத்தைப் போற்றுதல்போல், தமிழைத்
தூய்மையாய்ப் பேசுதற்கும் எழுதிடற்கும் நீவிர்
துணிவோடு முன்வருதல் வேண்டுமன்றே வேற்றுச்
சொல்வரவு மொழியாக்கம் செயப்பெற்ற கருத்தைச்
சுவையாக உரையாடிப் புழங்குநல்ல வாய்ப்பு
சுனைப்புள்ள இனமானக் குடும்பத்துச் சொத்தே!

(16-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

4. தேடுகின்றேன் (பாடல்கள்)

ஆசிரியர் : தங்கப்பா
வெளியீடு : புதுமைப் பதிப்பகம். 8, பாவேந்தர் தெரு, ஆண்டவர் நகர், சென்னை-24.
பக்கம் : 24; விலை 1.25.

'மக்களிடையில் தூய அன்பில்லை; ஒழுங்கில்லை;எளிமையில்லை; அன்புடையார்க்கும் துணையில்லை; தூய உறவில்லை. இவற்றையெல்லாம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் கண்டு கண்டு துன்புற்ற ஒருள்ளத்தின் புலம்பலே இந்த நூல்' என்று ஆசிரியர் தம் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். இஃது ஒரு சோர்வு மனப்பான்மை (Pessimism) என்பார் உளநூலார். எதிலும் கெடுதலையே காணும் நம்பிக்கையின்மைக் கோட்பாடு இது. இதற்கு எதிரான மன உணர்வு எதிலும் நல்லதையே காணும் நன்னம்பிக்கைக்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாவாணர் நூலெல்லாம் பணங்கொடுத்து வாங்கிப்
பயிலுங்கள்: நாள்தோறும் பழகுங்கள்' ஐயா,
பாவரிமா பெருஞ்சித்திரனார் நூலை - இதழைச் -
சாவாத தனித்தமிழ்க்குச் சான்றாகி வாழும்
சலியாத எழுத்தாளர் படைப்புகளைத் திரட்டிச்
சட்டகமாய் அழியாத பெட்டகமாய்க் காப்பீர்!
மூவாத தமிழகத்தை முன்னேற்ற உங்கள்
மொய்ம்பார்ந்த குழவியர்க்குத் தமிழ்ப்பெயரை இடுவீர்!
முறையான மொழிப்பற்றை வழியாகச் செய்வீர்!
நாவாலே தமைவளர்க்கும் அரசியலார் போல
நல்லறத்தீர் - இல்லறத்தீர் தமிழ்கெடுத்தல் வேண்டா!
நறுந்தமிழை வளப்படுத்த நாணுதீர்; முனைவீர்!

கையொப்பம் தாய்மொழியில் - தமிழ்மொழியில் - இடவும்
கைநடுக்கும் பட்டத்துத் தலைக்கனத்தார் - தமிழைக்
கற்பிக்கும் கணக்காயர் தொழில்செய்யும் காலம்:
மையொப்பம் ஆங்கிலத்தில் இடுவதனால் தம்மை
மதிப்பார்கள் பிறரென்னும் மனநோயால் வாடும்
மடத்தமிழர் மதிவறட்சிக் கொடுங்காலம்! 'முதலில்
வை, ஒப்பம் இடுகின்றேன்; வழியின்றேல் வழியே
வந்தவாறு சென்றுவிடு! கையூட்டம் நந்தம்
வாழ்க்கைமுறை' என்கின்ற பெருங்கயவர் காலம்:
பையுப்பப் பொருள்திரட்டிக் கொழுத்திடற்கே எந்தப்
பழிவரினும் கூசாமல் நீர்க்கின்ற மையால்
பைந்தமிழில் ஒப்பமிடார் இழிசெயலும் சிறப்பே!

Scanned with CamScanner

கோட்பாடு (Optimism) ஆகும். உலகம் எவ்வாறு இயற்கையானதோ, அவ்வாறே இவ்விரு மனப்பாங்கும் இயற்கையானவையே! இவ்விரு மனநிலைக்கும் பொதுவான ஒரு நிலையையே நன்று என்று கூறுவார் திருவள்ளுவப் பேராசான்.

தகுதி எனவொன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின். (111)

கருப்பொருள் நிலைகளான,

நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் (தொல்-பொருள்-90)

— என்பது, எத்துணை உண்மையோ, அத்துணை உண்மை அன்பு இரக்கம், உறவு, ஒழுங்கு, உண்மை — ஆகிய நல்லுணர்வுகளும், அன்பின்மை, கொடுமை, பகை, ஒழுங்கின்மை, பொய் ஆகிய தீயவுணர்வுகளும் ஒரே மனத்தில் கலந்து கிடப்பதும் (பலருக்கு அளவுகள் வேறுபடலாம்). சிலர், நன்றுகவாய்ந்த பிறவிச் சூழல், கல்விச் சூழல், வளர்ப்புச் சூழல், வாழ்க்கைச் சூழல், இவற்றால் நல்லுணர்வுகளை வளர்த்துக் கொள்கின்றனர்.

இந்நிலையில் உலகவியற்கையிலும் பிழையில்லை; மக்களின் மேலும் பிழையில்லை. பலரின் நலவளர்ச்சிக்கு வாய்ப்பாக இல்லாத தீய சூழல்களை உருவாக்கிக்கொண்ட மக்களியல் மனப்பாங்கிலேயே (Social Psychology) பிழைகள் உள்ளன. இந்நிலைக்குப் பொருளியலும் ஆட்சியியலும் காரணங்களாகும். சாய்க்கடைத் தீநாற்றத்துக்கிடையில், மல்லிகை மணம் எவ்வாறு நிறைவுற நுகரப்பெறுதோ, அவ்வாறே தீய சூழல்களுக்கிடையில் நல்லுணர்வுகள் வளர முடியாமல் சாம்பிப்போகின்றன. இவற்றை வெறும் அறிவுரை (உபதேசங்)களால் வருவித்தோ வளர்த்தோ விட முடியாது. சூழல்களைச் சரிப்படுத்தும் பொழுது மனம் பெரும்பாலும் நல்லுணர்வுகளையே பற்றிக்கொள்கின்றது.

இங்கு இன்னொன்றையும் நாம் நன்கு உணர்தல் வேண்டும். நல்ல சூழல்களை வெறும் பொருளியலால் மட்டும் உருவாக்கிவிட முடியாது. எனவேதான் வெறும் பொருளியலால் முன்னேறியுள்ளவர்களிடையும், அத்தகையவர்கள் வாழும் நாடுகளிலும்கூட நல்லுணர்வுகள் சான்ற மனவியல் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. அரசியலும், பொருளியலும், அறவியலும் ஒன்றுக வளர்த்தெடுக்கப் பெறும் பொழுதே நல்ல மனவியலும் வளர்ச்சி பெற முடிகிறது.

எனவே குறைகளை ஒரேயடியாக மக்கள் மேல் சுமத்திவிட முடியாது. நச்சு மரங்களும், முள்மரங்களும் தோன்றுவதற்கு, நிலம் பொறுப்பாக இருத்தல் முடியாது. அதில் நல்ல வித்துகளை ஊன்றுமையும், அவை வளர எருவும் நீரும் பாய்ச்சாமையும்,

அவை அழிந்துபோகாமல் காவாமையுமே காரணங்களாகும். நல்லவற்றையே இவ்வளவு கவனத்துடன் வளர்த்தெடுக்க வேண்டும். தீயவை தாமே செழித்து வளரும் தன்மையுடையவை. நல்லவை வளர்க்கப்பெறாமல் போகும்பொழுது தீயவை வளர்ந்து மண்டிவிடுகின்றன. இவற்றைப் பார்த்து வருந்துவதாலோ வெறுப்படைவதாலோ பயனில்லை; அஃது அறியாமை. அவற்றின் வளர்ச்சியைத் தடுக்க நல்லவற்றை வித்தி விளைவு செய்ய வேண்டும். பயிரை விளைவியாமல்போனால் களைகள் தாமே வளர்ந்து செழித்து விடும். களைகள் வளர்ந்துவிட்டனவே என்று கவலைப்படுவதாலும் சலித்துக் கொள்வதாலும் ஒரு பயனும் இல்லை.

பயிர் விளைவைச் செய்வதற்கு உண்மை அறிஞர்களே பொறுப் பேற்றுக் கொள்ளுதல் வேண்டும். அறிஞர்கள் அப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தவறுவார்களானால், பொய்யர்களும், புளுகர் களும், ஏமாற்றுக்காரர்களும், தந்நலக்காரர்களும் அப் பொறுப்பில் வந்து அமர்ந்து கொள்ளுகிறார்கள். அந்நிலையில் அவர்களின் பொய்யுரைகளும்,வஞ்சகவுரைகளுமே அறிவுரைகளாகிவிடுகின்றன; காரறிவே வழிகாட்டுதலாகி விடுகிறது. அக்கால் விளைவே தலை தடுமாறிப் போகின்றது. எனவேதான் திருவள்ளுவப் பேராசான், இப் பொறுப்பை அறிஞர்கள் தாமே முன்வந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார்.

அல்லவை தேய அறம்பெருகும்; நல்லவை
நாடி இனிய சொலின். (96)

— இதில் அறத்தைப் பெருக்க விரும்புபவர்கள், அதை உணர்ந்த வர்களாகவே இருக்க முடியும்; அவர்களே அதை நாடவும் இயலும். அத்தகையவர்களே உண்மை அறிஞர்களாக இருத்தல் முடியும். அறமுணர்ந்த அறிஞர்களே அவற்றை இனிமையாகவும், மனங் கொள்ளவும் மக்களுக்கு எடுத்துச் சொல்லமுடியும் என்று குறிப் புரைப்பார் திருவள்ளுவர். அவ்வாறு இனிமையாகவும் மனங் கொள்ளவும் எடுத்துச் சொல்பவர்கள் மக்கள் மேல் அன்புடைய வர்களாக இருந்தால்தான் முடியும்.மக்களை வெறுப்பவர்களால் அறத் தை உணர்த்த முடியாது; அவர்களால் அன்புணர்வோடு மக்களிடம் இனிமையாக எடுத்துச் சொல்ல முடியாது. இனிமை உள்ளத்தில் இருந்தால்தான் சொல்லிலும் அது வெளிவரும், வெறுப்பும் எரிச்சலும் உள்ள உள்ளத்தைக் கொண்டவர்களால், மக்களுக்கு அன்புடன் எதையும் குறிப்பாக, அறத்தை அஃதாவது நல்லன வற்றை எடுத்துச் சொல்லவே முடியாது.

எனவே, வெறுப்புணர்வும் எரிச்சலுணர்வும் (Pessimism) அவ்வளவு பாராட்டக்கூடிய உணர்வன்று. மக்கள்மேல் இரக்கம் கொள்ளுதல் வேண்டும். இரக்கமே அன்பாக மலரும். நமக்கு

அன்புணர்வு இருக்கலாம். ஆனால் அது மக்கள் மேல் செயல் படுதல்வேண்டும். அது செயல்படுமானால் நாம் அவர்களை வெறுக்கும் உணர்வோ, அவர்களைக் குறைபட்டுக் கொள்ளும் உணர்வோ வராது. மாறாக இரக்கவுணர்வே ஏற்படும்.

இப்பாடல் நூல் முழுவதிலும், மக்கள்மேல் குறைபட்டுக் கொள்ளும் உணர்வே மிகுந்திருக்கிறது.

வாழ்க்கையதன் பொருள் உணர்ந்து வாழ்வாரில்லை;
வளர்நோக்கம் என்னஎனத் தெரிவார் இல்லை.
தாழ்ச்சியின்றி உளம்சிறக்க நினைப்பார் இல்லை;
தகவுயர்ந்து மலர்ச்சிபெற முனைவாரில்லை.
ஆழ்ச்சியுறும் நல்லுணர்வில் திளைப்பாரில்லை;
அன்பூற்றாய்ப் பெருக்கெடுத்து நெகிழ்வாரில்லை.
பாழ்த்தவெறும் உலகியலாம் மயலுள் வீழ்ந்து
பற்றுமிகும் மகிழ்தேடி உழல்கின்றாரே!

பாட்டு நிலைக்கு இவ்வுரைமுறை அழகாக இருக்கலாம். ஆனால், இதில் கூறப்பெற்றுள்ள, வாழ்க்கையின் பொருளுணராத தன்மையும், வளர்நோக்கம் என்ன எனத் தெரியாத தன்மையும். தாழ்ச்சியின்றி உளம் சிறக்க நிலையாத தன்மையும் தகவுயர்ந்து மலர்ச்சி பெற முனையாத தன்மையும், நல்லுணர்வில் திளைக்காத தன்மையும், அன்பு பெருக்கெடுத்து நெகிழாத தன்மை யும், உலகியலுள் மூழ்கி பற்று மிகுந்த தன்மையும் அறியாமையின் பாற்பட்டவையே. அறியாமை குற்றமோ வெறுப்புக்குரியதோ அன்று. அறிவிக்காததே குற்றமும் வெறுத்தற்குரியதும் ஆகும். அறிவிக்காதது யார் குற்றம்? நல்ல அறிஞர்களின் குற்றமே ஆகும். அறிஞர்கள் இக்குற்றத்தைப் போக்க முயற்சி செய்யாத வரையில், மக்கள் இந்நல்லுணர்வுகளை அறியாதவர்களாகவே இருத்தல் முடியும். இனி, வெறும் அறிவிப்பு மட்டுமே இக்குற்றத் தைப் போக்கிவிட முடியாது. நல்வாழ்க்கை நிலைகளை அவர்களுக்கு அமைத்துத் தருதலும் வேண்டும். அவற்றை அறிவுறுத்தாமைக்கும் அவற்றுக்குரிய சூழல்களை அமைத்துத்தராமைக்கும் அறிஞர்களும் ஆட்சியாளர்களுமே குற்றவாளிகள்; அவற்றைப்பற்றி ஏதுமறியா மக்களல்லர்.

உள்ளத்தில் நல்லுணர்வுகளை வளர்த்தெடுப்பது அத்துணை எளிதன்று. ஒன்றை வளர்த்தால், இன்னொன்று சறுக்கும். அன்புள்ளவரிடம் அறிவிருக்காது; அறிவுள்ளவரிடம் அன்பிருக் காது; இரண்டும் உள்ளவரிடம் ஒழுங்கிருக்காது; மூன்றும் உள்ளவரிடம் மக்கள் பண்பிருக்காது; நான்கும் உள்ளவரிடம் துணிவிருக்காது; ஐந்தும் உள்ளவரிடம் ஆளுமைத் திறமிருக்காது. இப்படி ஒன்றிருந்தால் ஒன்றிராத

Scanned with CamScanner

நிலையில் என்ன செய்வது? இனி, அனைத்துக்கும் மேலாக எல்லாரிடமும் தொண்டுணர்வு இருக்காது; இருந்தாலும் செயல்படும் தந்நலமறுப்பிராது. இவ்வாறு எத்தனையோ இழுப்புப் பறிப்புகள். இவை எல்லாவற்றினும் மக்களை மீட்டெடுக்கும் தொண்டுணர்வே பெரிது. அதுவே மக்கட்பண்பு. எல்லாவகையான ஏற்றத் தாழ்வுகளையும் உணர்ந்து கொள்வதும்எடுத்துச் சொல்வதும் எளிது. அதற்கறிவிருந்தால் போதும். ஆனால் அறிவிருந்து என்ன பயன்? அது தொண்டாக மலர்ந்து, மக்கட்குப் பயனபடுதல் வேண்டும் என்பார் திருவள்ளுவப் பேராசான்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். (997)

எனவே, ஆயிரம் குறைகளை எடுத்தெடுத்துக் கூறிக் கொண்டிருப்பதைவிட, ஓரிரண்டு குறைகளைப் போக்குவதற்கான மக்கள் தொண்டினையே செயல்படுத்துதல் நல்லது.

நூலாசிரியரின் உள்ள உணர்வு மிகு தூய்மையுடையதாக இருக்கலாம். அதனால், அதுபோலும் தன்மை மக்களிடத்தில் இல்லையே என்று கவலுறலாம். ஆனால், அந்தக் கவலை, கவலையாகவே இருந்துவிடுவதால் என்ன பயன்? அந்தக் கவலையை நாமும் போக்கிக் கொண்டு, மக்களுக்கும் நலஞ்சேர்க்கும் பொதுநல வினையில் ஈடுபடல் வேண்டும். அதுவே அனைவர் கவலையையும் போக்கும் மாமருந்து.

மற்றபடி, இந்நூலில் எழுதப்பெற்றுள்ள பாடல்கள் யாவும் எளியன; இனியன; சொல்லின்பழும் பொருளின்பழும் நல்குவன. அனைத்துக்கும் மேலாக தூய தமிழில் ஆற்றொழுக்கான நடையுடையன. அவரின் பாட்டுத் திறத்தை நாம் பாராட்டிப் பெருமை கொள்ளுகிறோம்.

இனி, அன்பை எங்குந் தேடிப் போகவேண்டா. அது நம் உள்ளத்திலும் பிறர் உள்ளத்திலும் மணலுள் ஊற்றுப்போல் மறைந்து, உலகியலென்னும் பூசல் மேடிட்டுக் கிடக்கின்றது. உலகியல் பூசல்களை அகற்றும் பொழுது, ஊற்றுக் கண் திறந்தது போல் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பெனும் தூய நன்னீர் குமிழியிட்டுச் சிலிர்த்து வெளிப்பட்டு நிறைந்து வழிவதை நாம் பார்க்கலாம்; சுவைக்கலாம்; மகிழலாம். பாடல்பொதி கருத்து விளக்கத்திற்காகவே இவ்வளவும் கூறவேண்டி வந்தது.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் (511)

பெயர்ப்பட்டியல்-I

# தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி சுவடி —20, ஓலை 5-6-இல் வெளியிடப்பெற்ற அறிக்கையின்படி, தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பெறுகின்றன.

## 1. வாழ்நாள் உறுப்பினர்கள் பட்டியல்:

### தென்மொழி

| | | | |
|---|---|---|---|
| 1 | பு. அ. சுப்பிரமணியன், | புதுக்கோட்டை | 200.00 |
| 2 | மகிழ்நன், | பழனி | 200 00 |
| 3 | வேலா. அரசமாணிக்கம், | ஈரோடு | 200.00 |
| 4 | பொற்செழியன், | வெங்காலூர் | 200.00 |

### தமிழ்ச்சிட்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | மகிழ்நன் | பழனி | 120.00 |
| 2 | வேலா. அரசமாணிக்கம் | ஈரோடு | 120 00 |
| 3 | ச.ம. முத்து | மதுரை | 120.00 |
| 4 | சி. நா. சீனுவாசன் | வேங்கைவாடி | 120.00 |

## 2. பத்து உறுப்பினர்கள் சேர்த்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | சா. தங்கராசு | குவாகம் | |
| | | 16 உறுப்பினர்கள் 16×15 | 240.00 |

## 3. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள்:

9-9-82 முதல் 2-5-84 முடிய

| | | | |
|---|---|---|---|
| 1 | உ.ச. எழில் — இராசஇலக்குமி | வாழ்வாங்கி | 5.00 |
| 2 | அரங்கசாமி — கண்மணி | கொற்றமங்கலம் | 5.00 |
| 3 | நா. வினைதீர்குன்றன் | சென்னை-1 | 10.00 |
| 4 | சி. அரசிறைவன் | தஞ்சை | 5.00 |
| 5 | எசு. மல்லிகேசன் | புரசைவாக்கம் | 26.50 |
| 6 | இரணியன் | கோவை | 20.00 |
| 7 | மறை. திருநாவுக்கரசு | சென்னை-82 | 20.00 |
| 8 | இரணியன் | கோவை | 10.00 |
| 9 | குழந்தை ஈகவரசன் | திருச்சி | 5.00 |
| 10 | கோ. தேவராசன் | திருப்பத்தூர் | 10.00 |
| 11 | இரணியன் | கோவை | 10.00 |
| 12 | இமயநெடுஞ்சேரலாதன் | புதுகை | 2.07 |
| 13 | கா. இளமுருகன் | பு. புளியம்பட்டி | 25.00 |

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 14 | இரணியன் | கோவை | 10.00 |
| 15 | வீர. செல்லக்கண்ணு | கோவை | 6.50 |
| 16 | இரணியன் | ,, | 10.00 |
| 17 | பாலகங்காதரன் | திருச்சி | 1.00 |
| 18 | புலவர் நெடுஞ்சேரலாதன் | கரிவலம் வந்த நல்லூர் | 10 00 |
| 19 | இரணியன் | கோவை | 10.00 |
| 20 | வீர. செல்லக்கண்ணு | கோவை | 4.00 |
| 21 | இரணியன் | ,, | 10.00 |
| 22 | மு. பலராமன்—லலிதாம்பாள் | அவலூர் பேட்டை | 5.00 |
| 23 | இரணியன் | கோவை | 10.00 |
| 24 | அறிவுடைநம்பி | மூலனூர் | 10.00 |
| 25 | நாட்டுக்கோட்டையார் | தென்முடியனூர் | 1.00 |
| 26 | இரணியன் | கோவை | 10.00 |
| 27 | செ. நடராசன் | சென்னை-78 | 10.00 |
| 28 | ,, | ,, | 10.00 |
| 29 | ,, | ,, | 10.00 |
| 30 | உருக்குமணி—தண்டபாணி | கோவை | 20.00 |
| 31 | இரணியன் | கோவை | 20 00 |
| 32 | ,, | ,, | 20.00 |
| 33 | கு. தமிழ்நிலவன் | தஞ்சாவூர் | 10.00 |
| 34 | இரணியன் | கோவை | 10.00 |
| 35 | ,, | ,, | 10.00 |
| 36 | வளர்மதிசுப்புராயன் | திருச்சி 14 | 10.00 |
| 37 | சா. தங்கராசு | குவாகம் | 101.00 |
| 38 | கா. இளமுருகன் | பு. புளியம்பட்டி | 100.00 |
| 39 | சுப. சுப்பிரமணியன் | அந்தமான் | 100.00 |
| 40 | குமர. தன்னொளியன் | வேலூர் | 12.00 |
| 41 | சு. இளங்கோ | சென்னை-112 | 5 00 |
| 42 | வியனரசு வழி | சென்னை-5 | 100.00 |
| 43 | ஞா. தோ. பன்னீர்ச்செல்வன் | திருவைகுண்டம் | 101.00 |
| 44 | கா. இளமுருகன் | பு. புளியம்பட்டி | 25.00 |

## அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

Scanned with CamScanner

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதழ்களை அறிமுகம் செய்துவைத்துப் படிக்கச்செய்து, தங்களின் முயற்சி, செயல்பாடுகளை எடுத்துரைத்து வருகிறேன் கல்லூரிப் பாப்புனைவுப் போட்டி, கதை, கட்டுரை, ஆய்வுக்கட்டுரை அனைத்துப் போட்டியிலும்-"பாவலரேறு"வை இதுவரை நேரில் காணவிட்டாலும் ஐயாவையே தன் இலக்கிய வாழ்வின் நெஞ்சக ஆசானாய்க்(மானசீக குரு) கொண்டு வாழும் நான்-முதற்பரிசுகள் பெற்றேன். ஒவ்வொரு முறை நான் பரிசு பெறும்போதும், என் செயல்களுக்கு வெற்றி கிட்டும் போதும்-வளர்ச்சி அடையும்போதும்-பேராசிரியர்களிடமும், மாணவ நண்பர்களிடமும் பெற்றோர்களிடமும் இப்பரிசுகளுக்கெல்லாம் காரணியம் "பாவலரேறு" ஐயா அவர்கள்தாம் என்று உரைத்து வருகின்றேன். தாங்கள் 'நில்'ப்-பணிகளுடன் விரைவில் 'திருக்குறள் மெய்ப்பொருளுரையை" எழுதிவிடும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன். நன்றி என்றும் தங்கள் உண்மை-அன்பு

பாசமுறை. மணிமிடற்றன், மன்னம்பந்தல்.

0 : 1006 : ஐயா, வணக்கம். சென்ற சில மாதங்களாக இதழ்களில் வந்த செய்திகளைப் பார்த்தேன். தேவையற்றதை யெல்லாம் முகாமைப்படுத்த வேண்டிய சூழலுக்குத் தங்களைத் தள்ளிய அப்பெருமகன் வலுக்கட்டாயமாக எழுதுவானேன்? நிற்க.

எதையும் பெரிதுபடுத்தாது ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தங்கள் பணியைத் தொடருங்கள்; என்னால் இயன்ற அளவு தமிழ்ச் சிட்டிற்கு உறுப்பினர்களைச் சேர்த்து வைக்க முயற்சி செய்கின்றேன். — சி. நா. செந்தமிழ்ச் செல்வன். வேங்கை வாடி.

0 : 1007 : பேரன்பிற்கினிய பாவலரேறு ஐயா அவர்களே! வணக்கம். திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழித்துறையும் இல்லை; வரலாற்றுத் துறையுமில்லை.

அவையிரண்டும் நம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை மிகவும் வேண்டற்பாலன. ஒரு மொழியையும் அந்நாட்டின் வரலாற்றையும் புறக்கணித்தால்தானே பின்வரும் மக்களுக்கு அதன் பெருமை தெரியாமல் போகும். அங்குள்ள நூலகத்தில் ஓர் அகரமுதலியைப் பாருங்கள். பிராஞ் தமிழ் சகராதி என்ற பெயரில் உள்ளது. அதை ஆங்கிலத்தில் சரியாக FRENCH ENGLISH DICTIONARY என அச்சடித்திருக்கிறார்கள்.

தமிழ் மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் பெரும்பாலான துணைவேந்தர்கள் பண்டாரகர் பட்டம் பெறாதவர்கள். அவர்களுக்குக்கீழ் பணியாற்றும் பல்துறைப் பேராசிரியர்கள் பண்டாரகர் பட்டம் பெற்றவர்கள். அவர்களில் தமிழ் நலம் காப்போர் எத்தனைப்பேர்?

நீங்கள் ஒவ்வொரு துணைவேந்தரையும் நன்கு தெரிந்து கொண்டு அதன்பின் தமிழ் நலம் காக்கும் 'தமிழ்நிலத்தில்' வெளியிட வேண்டுகிறேன்.

நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகளில் இந்தி கற்றுக் கொண்டால் சம்பள உயர்வு; அதைக்கற்க அரசு உதவி. சுற்றறிக்கைகள் இந்தியிலும் ஆங்கிலத்திலும்தான் வருகின்றன? அது போலவே பல்வேறு வைப்பகங்களில் உள்ள நிலையையும் அறிந்து வெளியிட வேண்டுகிறேன். — மா. இலக்குவன். புதுக்கோட்டை

பெரியவர்களுக்கு இயன்ற வகையான் துணைநிற்றல் எனும் எனது கொள்கைக்கேற்பத் தங்கள் தொண்டிற்கு உறுதுணையாக என்னை அணியமாக்கிக் கொண்டுள்ளேன். இம்முறையில் தங்கள் அறிவிப்பிற்கேற்ப தென்மொழி-தமிழ்ச்சிட்டு ஆகிய இரு இதழ்களுக்கும் வாழ்நாள் கட்டணம் உருபா 320/-க்கான வைப்பக வரைவு இத்துடன் அனுப்பியுள்ளேன். மேலும், உறுப்பினர்க் கட்டணம் செலுத்தும் சில அன்பர்களையும் விரைவில் சேர்த்துத் தர முயன்று வருகிறேன். அவர்களின் ஒப்புதலைப் பெற்று ஆண்டுக் கட்டணத்துடன் அவர்களின் முகவரியையும் விரைவில் அனுப்பி வைக்கிறேன். அல்லாமல் இயன்றவகையால் எல்லாம் எனது அன்பும்-ஆர்வமும் ஆதரவும் தங்கள் பணிக்கு என்றென்றும் உண்டு என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள, — மகிழ்நன், பழனி-1.

0 : 1000 : பேரன்புடைத் தலைவ, வணக்கம்.

தென்மொழியின் நெடுவழிச் செலவு தொடர்ந்து நடக்க அனைவரும் துணையாக இருப்போம். தென்மொழி முகவர்கள் அனைவரும் 'கழிவுத்தொகை' பெறாமல் விற்றுக்கொடுக்க முன்வர வேண்டி அனைத்து அன்புள்ளங்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

இத் திங்கள் முதல் என் 'கழிவுத்தொகை'யினை நன்கொடையாக ஏற்றுக் கொள்க. 'மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்நிற் பவை' — என்ற குறளை நினைந்தேன், தங்களை நினைந்தபோது.

ஈழச்சிக்கலை உலகுக்கு முறையாக வெளிப்படுத்தித் தக்க தீர்வும் நல்கிய தங்கள் வருமுன் உணர்ந்துரைக்கும் பாங்கினை அமிர்தலிங்கனார் போன்றோர் இன்னும் உணரவில்லையே! "ஊறு ஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்." — என்பதை மறந்த அமிர்தலிங்கனார் பட்டும் தெரியாமல் இருக்கிறார். "உரிமை பெற்றால் அன்றி உயிருக்கும் உறுதியில்லை; கருமை தீய்ந்தால் அன்றிக் காய்மதிப்பில் ஒளியும் இல்லை, நரிகள் மாண்டால் அன்றி நல்மான்கட் கமைதி இல்லை விரைக விடுதலைக்கே! வேள்வியை மூட்டி நிற்க!" - என்ற ஆணையை விடுதலை மறவர்கள் ஏற்று விரைந்து செயல்பட்டாலன்றி, அங்கே அமைதி வராது; தமிழகத்தில் முன்புபோல் எழுச்சியும் காணோம். விரைவில் மறந்துவிட்ட வீரர்கள் வாழ் திருநாடு! என் செய்வது? ஒல்லும் வகையால்நாம் உதவிதனைச் செய்யலாம். ஆனால் இந்திய அரசுக்கு அந்நினைவே வராதே! எனவே சொந்தக் கைகளைநம்பியே சோர்வுறாமல் போராடும் எம் உடன்பிறப்புகளை ஊக்கி நிற்போம்.

அன்பு 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து, பழனி.

0 : 1001 : ஆசிரியர் பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். தென்மொழி இயக்கத்தைச் சேர்ந்தவர்களுள் நானும் ஒருவன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் வீட்டில் விலைகொடுத்து வாங்கிப்படிப்பது மூன்றே மூன்று தாளிகைகள். அவை தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு. எங்கள் வீட்டில் அனைவருமே தென்மொழிக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள்தாம். எங்கள் வீட்டுக் குழந்தைகளுக்குத் தூயதமிழ்ப்பெயர்களே வைத்திருக்கின்றோம்.

நான் திருப்பூரில் பின்னற்குழுமம் ஒன்றில் பணியாற்றுபவன். என்னால் இயன்ற தமிழ்ப்பணிகளைச் செய்து வருகின்றேன். திருப்பூரில் வெளியாகும் 'முருகு' என்னும் விளம்பர இதழில் நம் உ.த.மு.க.வை அறிமுகம் செய்து கட்டுரை எழுதியுள்ளேன். மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் செந்தமிழ்ச் சொற்பிறப்

பியலில் இதுவரை நாற்பது சொற்களின் வரலாற்றைச் சுருக்க அளவில், 'முருகு'வில் தொகுத்து வெளியிட்டேன்.

உ.த.மு.க.வில் யானும் ஓர் உறுப்பினன் என்பதில் பெருமையும் கடமையுணர்வும் பெறுகிறேன். நம் உ.த.மு.க.வின் கொள்கைகளை அடிப்படையாக வைத்துப் பாவியம் ஒன்றும் இயற்றிக் கொண்டிருக்கிறேன். — வள்ளிதாசன, திருப்பூர்-3.

0: 1002 : மெய்யுணர்வுப்பாவலர் அவர்களுக்கு, வணக்கம்.

'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்' என்னும் உயரிய குறளியக் கொள்கை நம்மவரிடையே நன்கு வேரூன்றி இருந்திருந்தால், இன்று அயலகத் தமிழருக்கு, ஏன், இந்தியத் தமிழருக்குங் கூட இழைக்கப்படும் இன்னல்களுக்கு என்றோ கழுவாய் கண்டிருக்கலாம். அதைவிடுத்து, 'யான்', 'என்' என்னும் 'தான் தோன்றித் தனங்கள்' அளவுக்குமேல் வளர்ந்துவிட்டதாலும், 'அடுதலும் தொலைதலும்' அவரவர்க்குள்ள தொழிலாய் அமைத்துக் கொண்டதாலும், இக்கால் தமிழன் குரலைக் கேட்பாரில்லாது போயினர்; அவனொரு 'முழுமை ஏதிலி' என்று முடிவும் கட்டிவிட்டனர். அத்தோடு, நாளுக்கு நாள் கொலைக்களச் செய்திகளும் குவிந்த வண்ணமிருக்கின்றன. "ஊன் கெட்ட தமிழரிடை உணர்வுண்டோ? குருதியுண்டோ? சூடுண்டோ? ஊர்த்தொண்டுக்கே?" என்கிற ஐயம் இன்னும் எழத்தான் செய்யும்!

— பேரா. தமிழன்பன்; க மு; மெய்.மு., விருதுநகர்

0 : 1003 : அன்பு கனிந்த ஐயா! வணக்கம்!

இன்று போல் பல்லாண்டுகள் குறைவற நீடு வாழ்ந்து நற்றமிழ்த் தொண்டு செய்து இனம், மொழி, நாட்டைக்காக்க வேண்டுமாய்த் தங்களின் மலர்தாள் பணிந்து கேட்டுக் கொள்கின்றேன். வாழ்த்துகின்றேன். தமிழ்த்தாயை இறைஞ்சுகின்றேன்.

அன்பன் — தாழை. ந. இளவழகன் மணப்பாறை

0 : 1004 : அன்புள்ள ஐயாவிற்கு, வணக்கம். தென்மொழி, தமிழ்ச்சிட்டின் தளர்நடையறிந்து, தாங்கொணு வருத்தமுற்றேன். குறிப்பாக, பாழ் அடைந்துவரும் இளங் குமுகாயத்திற்குப் பல்வகையிலும் 'சிட்டு' சிறப்புறப் பணியாற்றுகிறது. படிப்போர் எண்ணிக்கைக் குறைவாயினும். பயனடைவோர் எண்ணிக்கை மிகுதியாயுள்ளது. எனவே, நிறுத்தும் எண்ணத்தை நீக்கி விடுங்கள். குறைந்த அளவு யான் பத்து உறுப்பினர்களுக்கு மேல் வாங்கிடச் செய்கிறேன். விரைவில் கட்டணம் தண்டி அனுப்பி வைக்கின்றேன். என் முயற்சிக்குச் சிற்றெல்லை தாம் 10 உறுப்பினர்கள். எனவே இயன்றளவு உறுப்பினராக்கித் தருகின்றேன். அன்பன், — நா. எழில்-மகிழ்நன்-நெய்வேலி-1

0 : 1005 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம். இந்த எளிய உண்மைத் தொண்டன் தங்கள் நலம்வேண்டி வாழ்த்துகின்றேன். ஒவ்வொரு திங்களும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இயன்றவரை தமிழ்நிலமும் வாங்கிப் படித்து வருகிறேன். இதழ் நிறுத்தம் பற்றிய எண்ணத்தை நிறுத்த வெளியிட்டுள்ள அறிவிப்பைக் கண்டேன். என்னால் இயன்றவற்றைச் செய்கிறேன். இயன்றவை என்பது இயலாமைச் சொல்லன்று. நான் இப்போது மயிலாடுதுறை அ. அ.அ கல்லூரியில் இயற்பியல் இரண்டாமாண்டு பயின்று வருகிறேன். மாணவர்களிடைத் தமிழ்ச்சிட்டு, தென்மொழி

— தொடர்ச்சி 32-ஆம் பக்கம் பார்க்க